






# ஞானச்சுடர்

## மலர்

ஆவணி 2002




வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ



# குறள் வழி

" அகனமர்ந் தீதலின் நன்றே முகன
இன்சொலன் ஆகப்பெறின் " [மர்ந்(து)

பொருள்:— மனம் மகிழ்ந்து ஒருவனுக்கு ஒன்றைக் கொடுப்பதைக் காட்டிலும், முகம் மலர்ந்து இன்சொற்களைச் சொல்லுதல் சிறந்தது.

---



உ

# நற் சிந்தனை

## நல்லூரான் கிருபை வேண்டும்

### பல்லவி

நல்லூரான் கிருபை வேண்டும் — நாம் எந்நாளும்
பாட வேண்டும் – வேறென்ன வேண்டும்

### அநுபல்லவி

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
தூய குருவின்பாதம் துணையாகக் கொள்ள வேண்டும் (நல்லூ)

### சரணங்கள்

அல்லும் பகலுஞ்சிவ நாமத்தைச் சொல்ல வேண்டும்
ஆசை மூன்றையும் அடியோடு கொல்ல வேண்டும்
கண்டு கண்டுமனங் குளிர்ந்திட வேண்டும்
காமக் குரோத மோகத்தைத் தீர்க்க வேண்டும் (நல்லூ)

பொறிவழி போய்மனம் அலையாமை வேண்டும்
பூரண மான நிட்டையும் வேண்டும்
எல்லா ரிடத்துமன்பு செலுத்த வேண்டும்
எழில்பெறுஞ் சுழுமுனை வழிச்செல்ல வேண்டும் (நல்லூ)

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை.

NG.

பொதுசன நூல
யாழ்ப்பாண

உ

# ஞானச்சுடர்

வெளியீடு — 2 சுடர் — 56

2002 ஆவணி

## பொருளடக்கம்

பொதுசன நூலகம்
11 SEP 2002
யாழ்ப்பாணம்


| | பக்கம் |
|---|---|
| கதிர்காமம் எனப்போற்றப்படும் ... | 1 - 4 |
| சிவசின்னங்களுள் விபூதியின் சிறப்பு | 5 - 8 |
| ஒரு கணம் உன்னோடு | 9 - 10 |
| குரு பக்தி | 11 - 13 |
| ஆறுமுகமான பொருள் | 14 - 17 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக்கந்தன் திருத்தல புராணம் | 18 - 19 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும் ...... | 20 - 22 |
| வள்ளுவம் கூறும் இன்சொல் | 23 - 25 |
| சந்நிதி வெண்பா | - 26 |
| நுணாவிலிறை விளைவேலி ...... | 27 - 28 |
| சந்நிதியான் | 29 - 32 |
| சிவபூமி புற்றுநோயாளர் ... .. | - 33 |
| இறைவனை வணங்க வேண்டுமா? ... ... | 34 - 35 |
| சமய வாழ்வில் நாம் | 36 - 38 |
| மோதகமும் கொழுக்கட்டையும் | 39 - 40 |


அன்பளிப்பு: மலர் ஒன்று ரூபா- 30/—
வருடச்சந்தா தபாற் செலவுடன் 385 — ரூபா
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

அச்சுப்பதிப்பு: அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

உ

# சந்நிதிக் கந்தன்

அருள் சுரப்பான் அன்னக் கந்தன்
பொருள் குவிப்பான் சந்நிதிக் கந்தன்
இருள் கலைப்பான் அன்னக் கந்தன்
இடர் களைவான் சந்நிதிக் கந்தன்.

கடலிற் குளிப்பான் சந்நிதிக் கந்தன்
உடலிற் குளிர்வான் அன்னக் கந்தன்
மடலில் நகைப்பான் சந்நிதிக் கந்தன்
படகில் இருப்பான் அன்னக் கந்தன்.

நாளும் அமிழ்தாவான் அன்னக் கந்தன்
ஆளும் நிலமாவான் சந்நிதிக் கந்தன்
தோளில் அமர்வான் அன்னக் கந்தன்
கோளில் நிலவானான் சந்நிதிக் கந்தன்

பூவில் வண்டாவான் சந்நிதிக் கந்தன்
பாலில் நெய்யாவான் அன்னக் கந்தன்
நாவில் தமிழானான் சந்நிதிக் கந்தன்
மூன்று தமிழானான் அன்னக் கந்தன்

பூ. புலேந்திரராஜா

" ஞானச்சுடர் "

# ஆடி மாத வெளியீடு

வெளியீட்டுரை:-

ஆடிமாத ஞானச்சுடருக்கான வெளியீட்டுரையைச் சமாதானநீதிவான் சி. பத்மநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள். பேரவையால் வெளியிடப்படும் 55வது சுடரை வெளியீடு செய்வது தொடர்பாகத் தமக்குக்கிடைத்த இந்தச்சந்தர்ப்பத்தை ஒருபெரும் பேறாகக் கருதுவதாகக் குறிப்பிட்ட திரு. சி. பத்மநாதன் அவர்கள் சுடர்தொடர்பான பல சிறப்புக்களை அடியார்களுக்குஎடுத்துக்காட்டினார்கள் அந்திமேஷ்டி நடைபெறுகின்ற பொழுது வெளியிடுகின்ற கல்வெட்டுக்கள் கூடக் கடைசி நேரத்தில் மிகவும் சிரமப்பட்டு வெளியிடுவதைப் பார்க்கும் பொழுது ஞானச்சுடர் 55வது மலரானது குறித்தநாளில் வெளியிடப்படுவது பற்றியும் அது தொடர்பான பேரவையினர் பங்களிப்புப்பற்றியும் எடுத்துக்கூறினார்கள்.

மதிப்பீட்டுரை:-

மதிப்பீட்டுரையைத் திரு. செ. கந்தசத்தியதாசன் அவர்கள் வழங்கினார்கள். திரு. செ. கந்தசத்தியதாசன் அவர்களும் சி. பத்மநாதன் அவர்களுடைய கருத்தை வலியுறுத்தினார்கள் எமது சமயத்தில் நேரம், ஒழுங்கு என்பன பேணப்படுவதில்லை எனக்குறைகூறப்பட்டு வரும் வேளையில் இங்கே நடைபெறும் அனைத்துச்செயற்பாடுகளும் குறிப்பிட்ட ஒழுங்கில் இடம்பெற்றுவருவதைச் சுட்டிக்காட்டினார்கள்.

வழிபாடு என்பது ஆலயத்திற்குச் சென்று வழிபடுவது மட்டுமல்ல என்பதைப் பலபேர் உணர்ந்து கொள்வதில்லை என்பதைத் திரு. சத்தியதாசன் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். எமது அன்றாட வாழ்க்கையில் தர்ம நெறிப்படி வாழ்வதைச் சமயம் வலியுறுத்துவதையும் அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்கள். நாம் முற்பிறப்பில் நல்லவற்றைச் செய்தமையாலேயே இப்பிறப்பில் மனிதர்களாகப் பிறந்திருக்கின்றோம் ஆகவே அதனை உணர்ந்து இப்பிறவியிலும் நல்லவற்றைச் செய்வது தான் எல்லாவகையிலும் பொருத்தமானது என்பதைத் தெளிவுபடுத்தினார்கள்.

இந்தவகையில்தான் ஆச்சிரமமும், பேரவையும் நல்லவற்றைச் செய்கின்றார்கள் இவர்கள் செய்கின்ற நல்லவிடயங்களை முருகப்பெருமானும் ஏற்றுக்கொண்டதனால் முருகப்பெருமானே வழிநடாத்திச்செல்வதையும் நாம் உணர முடிகின்றது. என்பதை எடுத்துக் கூறியதுடன் மலரில் இடம் பெற்ற கட்டுரைகளையும் அவற்றின் சிறப்புக்களையும் சுருக்கமாக மதிப்பீடுசெய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

ஸ்ரீ செல்வச்சந்நிதியின் கண்டாமணி 09 - 08 - 2002 வெள்ளிக்கிழமை இந்தவருட உற்சவ ஆரம்பத்துடன் ஒலிக்க விடப்பட்டுள்ளது இந்த நிகழ்வு உண்மையில் அங்கு கூடியிருந்த எல்லோரையும் பக்தி பரவசத்தில் ஆழ்த்தியது மட்டுமன்றி அங்கு கூடியிருந்த அனைவருக்கும் மறக்கமுடியாத ஒரு நிகழ்வாகவும் அமைந்திருந்தது

உற்சவம் ஆரம்பித்து சுவாமி உள்வீதி உலாவந்து வெளிவீதிக்குள் பிரவேசிக்க இருந்தசமயத்தில் மணி ஒலிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன இதற்கமைவாக உற்சவகாலத்தின் பிரதமகுரு ஆ. சிவசண்முக ஐயர் உட்பட ஆலயத்தின் பிரதான குருக்கள் பலர் கண்டாமணிக் கோபுரத்தின் உச்சிக்குச் சென்று மணியின் முதல்நாதத்தை ஒலிக்கச் செய்வதற்கான சடங்குகளில் ஈடுபட்டனர்

அடியார்கள் பக்திவெள்ளத்தில் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் இவ்விதமான சடங்குகளில் ஈடுபடுவதற்காக 54 அடி உயரமான மணியின் கோபுர உச்சிக்குக் கப்பியின் உதவியுடன் தொட்டில் போன்ற அமைப்பொன்றுக்குள் இருக்கச்செய்து குருக்கள்மார் ஒவ்வொருவராகக் கோபுரஉச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இன்னும் குருக்கள் சிலர் தாங்களாகவே கோபுர உச்சிக்கு ஏறிச் சென்றதையும் காண முடிந்தது அது மட்டுமன்றி அவ்வளவு உயரத்தில் நின்று எவ்வித பதற்றமுமின்றிச்சடங்குகளை மேற்கொண்டமை ஒரு சாதாரண காட்சியாகவே தென்பட்டது

இவ்வாறு கோபுரத்தின் உச்சியிலிருக்கும் மாமணிக்கு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனைகள் எல்லாம் செய்யப்பட்டபின்னர் அடியார்கள் எல்லோரும் அரோகரா! அரோகரா என்று ஒலி எழுப்ப மாமணியின் நாத ஒலியும் டாங் டாங் என்று ஒலிக்கவிடப்பட்டது

மாமணி இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதனால் ஏற்பட்ட சமாதானச் சூழலினாற் போலும் ஏற்கெனவே திட்டமிடப்பட்டதற்கு மாறாகத் தரை வழியாகவே மணி கொண்டுவரப்பட்டமையும், உற்சவ காலத்தில் மங்களகரமாக ஒலிக்கவிடப்பட்டமையும் குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயங்களாகும்.

மேலும் ஆற்றங்கரையானுடைய இந்த மாமணியின் ஓசையுடன் நாட்டிலே சமாதானமும், சாந்தியும் ஏற்படச் சந்நிதியான் அருள்பாலிக்க வேண்டுமென மாமணி ஒலிப்பதைத் தொடர்ந்து இடம்பெற்ற சிறப்புக் கூட்டத்திலும் சப்பறத்திருவிழாவின் பொழுது இடம்பெற்ற மாமணிச்சிறப்பு மலர் வெளியீட்டிலும் பலர் கருத்து வெளியிட்டதையும் காணமுடிந்தது இந்த வேண்டுதல் நிறைவேறிச் சாந்தியும், சமாதானமும் நாட்டில் ஏற்பட நாமும் சந்நிதியானின் பாதங்களைப் பணிவோமாக.

# ஆவணி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. M. இந்திரசேகரன்
(அவுஸ்திரேலியா)

திரு. R. ரவீந்திரன்
(அவுஸ்திரேலியா)

திரு. மா. அருட்செல்வம்
(எழுது வினைஞர், புலோலி வடமேற்கு)

திரு. செ. அருளானந்தம்
(கிராம அலுவலர், பருத்தித்துறை)

திரு. வி. தவத்துரைராசா
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)

திரு செ. ஸ்ரீகாந்தன் (அருள்)
(வீரப்பராயன், கரணவாய்)

திரு. செ. சுந்தரலிங்கம் J. P.
(சதாபொண்டஸ், அல்வாய் கிழக்கு)

செல்வி தம்பு சரோஜா
(சங்கீத முதன்மை ஆசிரியர், நெல்லியடி)

திரு. ச. நவரெத்தினராஜவேல்
(ஆசிரியர், புத்தூர்)

திருமதி கௌரி சுரேசன்
(விரிவுரையாளர், தேசியக் கல்லூரி)

திரு. செ. இரத்தினசிங்கம்
(செயலாளர் விவசாயக்குழு, உடுப்பிட்டி)

அதிபர்
(சோமாஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்)

திரு. K. இராமநாதன்
(வானொலிப் பாடகர், சத்திரங்கை கம்பர்மலை)

திரு. ச. சூரியப்பெருமாள்
(ராகுல சூரியன்ஸ் புடவையகம், பருத்தித்துறை)

திரு. C. K. சிதம்பரநாதன்
(கௌரி வாசம் வட்டுவத்தை, அல்வாய்.)

Dr. பொன். சின்னத்தம்பி
(வதிரிச்சந்தி கரவெட்டி)

திரு. வே. பரமநாதன்
(15-ம் கட்டையடி, உடுப்பிட்டி)

உரிமையாளர் - சுந்தர்சன்
(மானிப்பாய்)

உரிமையாளர் - வளர்பிறை பட்டுச்சோலை
(சங்கானை)

திருமதி த. சிவலிங்கம்
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

உரிமையாளர்
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

திரு. அருள்நாயகம்
(கல்வியங்காட்டுச் சந்தை, கல்வியங்காடு)

தலைவர், செயலாளர்
(கருணையம்பதி ச. ச. நிலையம், கரணவாய் மத்தி)

உரிமையாளர்
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)

திரு. க. கிருபாகரசூரியன் J. P.
[புலோலி]

திரு. வே. பாராளன்
[தொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம்]

திரு. S. தர்மரெத்தினம் (அதிபர்)
[சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி]

பிரம்மஸ்ரீ கு. தியாகராச சர்மா (நீர்வைமணி)
[நீர்வேலி]

திரு. வ. சி. குணசீலன்
[தாவரவியல் ஆசிரியர், கரவெட்டி]

திரு. தி. மகாலிங்கம்
[கிராம அலுவலர் கொட்டடி யாழ்ப்பாணம்]

திரு. க. சிவஞானசுந்தரம்
[அச்சுவேலி வடக்கு]

திரு. இ. பரமசாமி
[கொல்லோலை, உடுப்பிட்டி]

திரு. ச. இராஜேஸ்வரன்
[கரந்தன், நீர்வேலி மேற்கு நீர்வேலி]

திரு. சீ. கந்தசாமி
[இராச வீதி, சிறுப்பிட்டி மேற்கு]


திரு. சி. பஞ்சலிங்கம் (லிகிதர்)
[கிராமிய வங்கி - ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி]

திரு. கு. ஸ்ரீமுருகமூர்த்தி
[கிளை முகாமையாளர் - ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி.]

உ

# கதிர்காமம் எனப் போற்றப்படும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்

செ. ஞானசபேசன்



ஈழ நாட்டின் வடகோடியிலே அமைந்துள்ள தொண்டைமானாற்றங்கரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் செல்வச்சந்நிதி முருகனின் பெருமையை அறியாதார் அறியாதாரே.

வடக்கும் மேற்கும் கடலாலும் தெற்கும் கிழக்கும் கழனிகளாலும் சூழப்பெற்று அடர்ந்த நிழல் தருமரங்கள் நிரம்பப் பெற்ற சூழலில் அமைந்திருக்கும் செல்வச்சந்நிதி ஆலயத்தைச்சூழ முப்பதுக்கும் மேற்பட்ட அன்ன தான மடங்கள் இருந்தன. செல்வச்சந்நிதி முருகனை வழிபட, நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற தீராத நோய்களைத் தீர்க்க, வயோதிப காலத்தை

பொறுமை முன்னேற்றத்திற்கு முதற்படி

அமைதியாகக் கழிக்க வரும் பக்தர்களின் பசி தீர்க்கும் இடங்களாக இவ்வன்னதான மடங்கள் விளங்கின. இதனால் செல்வச்சந்நிதி முருகனுக்கு அன்னதானக் கந்தன் என்ற பெயரும் உண்டு. வரலாற்றுப் பெருமை மிக்க இவ் ஆலயச் சூழலில் அமைந்திருந்த அன்னதான மடங்களிற் பெரும்பாலானவை போர்க்காலச் சூழ்நிலைகளினால் முற்றாக அழிந்தும் பகுதி பகுதியாக உடைந்து சிதைந்தும் காட்சி அளிக்கின்றன. இந்த இன்றைய நிலையிலும் ஆலயத்தின் கிழக்குப் புறத்தில் அமைந்துள்ள "சந்நிதியான் ஆச்சிரமம்" தொடர்ந்தும் தினந்தோறும் போற்றத்தக்க முறையில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்குவதுடன் சைவ, தமிழ்ப் பண்பாட்டினைப் பேணும் உத்தரவாதமுள்ள கலாசார அபிவிருத்திப் பணிகளையும் பெருமளவில் மேற்கொண்டு வருகின்றது.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் வரலாறு மிகவும் பழைமையானது. முருகப் பெருமானின் தூதுவரான வீரவாகுதேவர் திருச்செந்தூரிலிருந்து தூதுசெல்லும் வழியிலே முருகனின் வேலொன்றை வைத்து வழிபட்டதும், கதிர்காமக் கந்தனின் ஆணைக்கு இணங்க ஞானிஒருவர் தொண்டைமானாற்றங் கரையில் தவம் இருந்து முத்தியடைந்ததுமான இடத்தில் தான் செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாற்றங் கரையில் வசித்து வந்த கதிர்காமர் என்னும் முருகபக்தருக்கு ஆடு மேய்க்கும் சிறுவனாக முருகப்பெருமான் காட்சி கொடுத்து, "உமக்குத் தேவையானவற்றை நான் தருவேன் உமது துன்பம் எல்லாம் நீங்கும் நீர் அறுபத்து நான்கு ஆலம் இலைகளில் அமுது படைத்து என்னை வழிபட வேண்டும்" என்று தெரிவித்தருளினார். இதனைக் கேட்டு அதிசயமடைந்த கதிர்காமர் நீர் யார்? என்று சிறுவனைக் கேட்டார். அப்பொழுது அச்சிறுவன் தானே முருகன் என்பதை அவருக்குணர்த்தியபோது கதிர்காமர் தனக்குப் பூசை முறைகளோ மந்திரங்களோ தெரியாது எனக் கூறுதலும் அவரைக் கணப்பொழுதில் கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூசை முறைகளைக் காட்டினார் அத்துடன் அவர் வைத்துப் பூசை செய்வதற்கு வேலொன்றையும் கொடுத்து மறைந்தருளினார் என ஆலய புராணம் கூறுகின்றது.

இவ்வாறு கதிர்காமத்தில் பூசை முறைகளைப் பார்த்த கதிர்காமர் ஆடு மேய்க்கும் சிறுவனாக வந்த முருகப்பெருமான் கொடுத்த வேலையே வைத்துச் சைவ ஆசாரங்களை மேற்கொண்டு முருகன் கூறியவாறு அறுபத்து நான்கு ஆலம் இலைகளில் அமுது படைத்து

நற்செயல்களையே நாள்தோறும் செய்க.

வாய்கட்டிப் பூசைசெய்து வந்தார். அவர் வேண்டிய பொழுதெல்லாம் முருகப்பெருமான் அவருக்குக் காட்சி கொடுத்து அருள்பாலித்தார் என்பது வரலாறு. சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும் இச் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இன்றும் கதிர்காமரின் பரம்பரையினர் கதிர்காமத்தில் நடைபெறுவது போன்று அன்பு மார்க்கத்தில் சைவ ஆசாரத்தோடு பூசைகளையும் திருவிழாக்களையும் நடாத்தி வருகின்றனர்.

வாய்கட்டிப் பூசை செய்தல் வள்ளிக்கிழங்கு முளையிடுதல் மயமான கொடியேற்றம் வள்ளி அம்மன் மண்டபத்திற்குச் சுவாமியை எழுந்தருள வைத்து வள்ளி அம்மன் அருகில் வீற்றிருக்கச் செய்து பூசை செய்த பின் வீதி உலா நிகழ்த்துதல், முருகன் வீதி வலம் வந்து கோயிலுக்குள் சென்றதும் பருவமடையாத சிறுமியர் பன்னிருவர் ஆர்த்தி எடுத்தல் போன்ற நூதனமான பல விடயங்கள் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம் பெறுவதைக் காணலாம்.

கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி முதல் நான்கு நாட்களும் பகலில் மாத்திரம் சுவாமி உள்வீதியில் மட்டும் உலாப்போந்தருள்வார். பத்தாம் நாள் பூங்காவனத் திருவிழாவும் பதினான்காம் அல்லது பதினைந்தாம் நாள் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். திருவிழா ஆரம்பமானதும் குடாநாட்டின் நாலா பக்கத்தில் இருந்தும் பக்தகோடிகள் அலை அலையாக ஆலயத்திற்கு வந்து தமது நேர்த்தியினை நிறைவேற்றிக் கைமேற் பலன் கண்டு மகிழ்ச்சி பொங்கி வரக்காண்பது இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாகும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாற்காவடி, பறவைக்காவடி, துலாக்காவடி, தூக்குக்காவடி, கரும்புக்காவடி, மயிற்காவடி, ஆட்டக்காவடி, வேற்காவடி, செடிற்காவடி போன்ற பலவித காவடிகளை எடுத்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதனைக் காணலாம்.

பெரும்பாலும் கோயில்களின் பெயர்கள் இடத்தின் பெயரை அல்லது தலமூர்த்தியின் பெயரைக் கொண்டிருக்கும். ஆனால் இவ்வாலயம் செல்வச்சந்நிதி என்று மாத்திரமே வழங்கப்படுகின்றது. இதுதவிர சந்நிதியான், அன்னதானக்கந்தன், ஆற்றங்கரையான் காவடிக்கந்தன் என முருக பக்தர்கள் சந்நிதி முருகனைச் செல்லமாக அழைப்பதே பெரும்பான்மை. கோயில்களில் சந்நிதிகள் உண்டு ஆனால் இங்கு சந்நிதியே கோவிலாக உள்ளது. என்ற பாராட்டும் இதற்கு உளதாகும். இன்றும் செல்வச்சந்நிதி ஆலயத்தின் வரலாற்றுச் சுவடுக

ளாக வீரவாகுதேவர் வேல்வைத் துப்பூசை செய்ததாகக் கூறப் படும் பூவரசமரமும், தற் பொழுது நாகதம்பிரான் ஆல யத்தின் பிற்புறத்தில் அமைந்தி ருப்பதையும் முருகப்பெருமா னும் மருதர்-கதிர்காமரும் அமர்ந்திருந்து கதைத்ததாகக் கூறப்படும் இரு திண்ணைகளும் ஆலய நந்திக்குப் பின்னால் கோயில் முகப்பில் இருப்பதை யும் காணலாம்.

# அன்னக் கந்தனே

புரிந்துணர்வு ஒப்பந்தம்
பரிந்துனரு ளால் வந்த
புண்ணியப் பேறு என்றே
போற்றியே தமிழ் மக்கள்
நாற்றிசையும் முருகவுனைப்
புகழ்ந்துபா ராட்டித் துதிப்பர்
அருந்தவஞ் செய்தவர்கள்
சொரிந்தகண் ணீராறாய்
அகிலமெல் லாம்நனைக்க
அவரழுகை நீ கண்டு
மொழிந்தசொல் செவிகேட்க
அரசுமே தானுமுடனாய்ப்
பெருங் கருணைத் திறங்கொண்டு
பெருவீர னுடன் சேர்ந்து
பெற்றபரிசை நாம்மறவோம்
பெரிய இடர் துன்பங்களைப்
பேசிட எழுதவிப்
பேனா இடந்தருமோ
வருங்காலந் தமிழர்கள்
கலங்காது வாழ்ந்திட
வரம் பொன்றைக் கட்டியெழுப்பி
வாழும் வகை செய்திடாய்
சூழுஞ் சந்நிதிக் கோயில்
வைகும் அன்னக் கந்தனே!

முது பெரும்புலவர்
வை. க. சிற்றம்பலம்

துணிவுடன் துணையும் இருத்தல் வேண்டும்.

உ

'' உள்ளத்தனையது உயர்வு ''

# சிவசின்னங்களுள்

# விபூதியின் சிறப்பு

செல்வி க. சசிலேகா

சிவபெருமான் பிறப்பு, இறப்பு இன்றி என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் செய்ய வல்லவர்; இயல்பாகவே எல்லாம் அறிபவர், தமது அனுபவத்தின் பொருட்டுப் பிறிதொன்றையும் வேண்டாதவர்; தம்வயமுடையவர்; ஆன்மாக்களிடத்திலுள்ள இரக்கமே திருமேனியாக உடையவர்; ஒருவரேயன்றி வேறில்லாதவர். ஆதலால், அவரையே பசுபதி என்று மெய்யன்புடன் வழிபடுகின்றவர் சைவர்.

உடலை இயக்குவது உயிர்; உயிருக்குள் உயிராக நின்று அதனை இயக்குபவன் இறைவன் அவனை நினைவூட்டும் சின்னங்களாக விளங்குபவை சிவசின்னங்களாகும். அவையாவன, விபூதி, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து என்பனவாகும். இவற்றில் விபூதி, உருத்திராக்கம் ஆகியன வெளிப்படையான சின்னங்களாகவும் திருவைந்தெழுத்து உள்நின்று உணர்வூட்டும், சின்னமாகவும் விளங்குகின்றன. சைவசமயத்தவர்கள் தம்மை மேம்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்துகின்றசாதனங்களாகவும் சமயப் பற்றை எடுத்துக்காட்டும் அடையாளச் சின்னங்களாகவும் இறையுணர்வை ஏற்படுத்துவனவாகவும் இவை விளங்குகின்றன.



ஒருவனையே தனக்குநாயகனாகக் கொண்ட பதிவிரதை தனது நாயகனால் அணிவிக்கப்பெற்ற திருமாங்கலியம், மோதிரம் என்பவற்றைத் தன்கற்பு நிலைக்கு அடையாளமாகத் தரித்து ஒழுகுவாள். அது போலச் சிவபெரு

இறைவனின் குணம் கருணை.

மானையே பரம பதியெனக் கொண்டு வழிபடும் ஒவ்வொரு வரும். அன்புக்கு அடையாள மாகத் தரிக்கத்தக்கன விபூதி உருத்திராக்கம் என்னும் இரண்டு மேயாகும்.

திருமாங்கலியம் முதலிய அடையாளங்களைத் தரிக்கக் கூசுகின்றவள் குலமகள் எனப் படாள். அதுபோல் விபூதி, உருத் திராக்கங்களாகிய சிவசின்னங் களை எவன் தரிக்கக் கூசுகின் றானோ அவன் சைவன் எனப் படான் எனச்சமய நூல்கள் கூறுகின்றன. பிற அணிகலன் களைத் துறந்தாலும் திருமாங் கலியத்தைக் குலமகளிர் துறந் திரார். அதுபோல் எவற்றைத் தரியாதிருந்தாலும் சிவசின்னங் களைச் சிவனடியார் (சைவசம யிகள்) என்போர் தரியாதிருக் கலாகாது. ஆதலால், விபூதி, உருத்திராக்க தாரணம் சைவ சமயிகட்கு இன்றியமையாதன வேயாகும். இவற்றிலே நாள் தோறும் அணியப்படுவது விபூதி ஆகும்.

விபூதி என்ற சொல்லுக்கு பற்பம், பசுமம், பசிதம், சாரம், இரட்சை, திருநீறு, சஷரம் என்ற பெயர்களும் வழங்குகின் றன. விபூதி என்ற சொல்லின் பொருள், மேலான செல்வம் என்பதாகும். (விபூதி = வி - மேலானது பூதி - ஐசுவரியம் அல்லது செல்வம்) இங்கு, மேலான செல்வம் என்பது முத் திப்பேற்றைக் குறிப்பதாகும் பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு என் னும் திருஞானசம்பந்தப் பெரு மான் அருள்வாக்கு இதனை மெய்ப்பித்தலைக் காணலாம். மேலும், பாவங்களை நீக்கி முத்திச் செல்வத்தைக் கொடுப் பது என்பதாலும் தெய்வத் தன்மை பொருந்திய சாம்பல் என்பதாலும் திருநீறு என்றும் பசுமம் என்றும் சிவஞானத்தை விளக்குவது என்பதால் பசிதம் என்றும் ஆன்மாக்களைத் துன் பங்களிலிருந்து விடுவிப்பதால் இரட்சை என்றும் மலங்களை நீக்குவதால் பற்பம் என்றும் ஒளியைத் தருவது என்பதால் பசிதம் என்றும் தடைகளை அறுப்பதால் சஷரம் என்றும் மல அழுக்குக்களை நீக்குவதால் சாரம் என்றும் விபூதி அழைக் கப்படுகின்றது.

இவ்விபூதிக்கு ஐம்பத்து நான்கு இயல்புகள் கூறப்படுகின் றன இது பசுவின் சாணத்தைத் தீயினால் எரித்து உண்டாக்கப் படுகிறது. புதுத்துணியினால் அரித்தெடுத்து மல்லிகை, முல்லை, சிறுசண்பகம் முதலான நறுமலர்கள் சேர்த்துப் பட்டுப் பையில் அல்லது சம்புடத்தில் அல்லது வில்வக் குடுக்கையில் சேமித்துவைக்கப்பட வேண்டி யது. விபூதியானது கல்பம், அனு கல்பம், உபகல்பம் ஆகிய மூன்று

வகைகளில் தயாரிக்கப்படுகின்றது.

கல்பம் என்றால் உடல் நலம் பொருந்தியதும் கன்றுடன் கூடியதுமான பசுவின் சாணத்தைப் பூமியில் விழாமல் தாமரை இலையில் ஏற்று மேலும் கீழும் நீக்கி நடுப்பகுதியை எடுத்துப் பால், தயிர், கோமயம், நெய் ஆகியவற்றைச் சேர்த்துத் தட்டிக் காயவைத்து வெண்மையாக்கும் தன்மையுடைய உமிமுதலியவற்றால் நன்கு மூடி உரிய மந்திரங்களுடன் சிவாக்கினியில் எரித்து எடுப்பது ஆகும் இதுவே மிகவும் சிறந்த விபூதியாகும் அனுகல்பம் என்பது நிலத்திற் கிடைக்கும் சாணத்தைத் திரட்டியெடுத்துச் சிவாக்கினியில் மந்திரங்களோடு எரித்து எடுப்பதாகும், இது மத்திமம் உபகல்பம் என்பது மாட்டுத்தொழுவத்தில் கிடைக்கும் சாணத்தைக் காட்டுத் தீயில் எரித்துப் பின்மறு படி சிவாக்கினியிலும் எரித்தெடுப்பதாகும். இது அதமம். மேலும் அரசு, ஆல், அத்தி ஆகிய மூன்றினாலும் எடுத்துத் தூய்மைக் குறைவாகத் தயாரிக்கப்பட்ட விபூதியைப் பாலிற் கழுவிக் காயவைத்துப்பின் துணியினால் அரித்துப் புதுமண்பாத்திரத்திலிட்டு அதனுள் வாசனைப் பூக்கள் இட்டுப்பஞ்சாட்சர மந்திரம் முதலியவற்றினால் ஓதித் தியானம் செய்து துணியினால் மூடிவைத்தல் வேண்டும்.

விபூதி அணியும் முறையானது உத்தூளனம், திரிபுண்டரம் என இருவகைப்படும். உத்தூளனம் என்பது பரவிப் பூசுதலாகும். சைவசமயிகள் யாவரும் இவ்வாறு விபூதி தரிக்கலாம் திரிபுண்டரம் என்பது நீருடன் சேர்த்து முக்குறிகளாகத் தரித்தலாகும். (திரி-மூன்று, புண்டரம்—குறி) சமயதீட்சை பெற்றோரே இவ்வாறு தரிக்கத் தகுதியுடையோராவர். திரிபுண்டரமாகத் தரிக்கும் இடங்களாவன தலை, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கை இரண்டு மணிக்கட்டுக்கள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடங்களுமாகும் இங்ஙனம் திரிபுண்டரமாகத் தரிக்கும் போது நெற்றியில் இரண்டு கடைப் புருவ எல்லை நீளமும் மார்பிலும் தோள்களிலும் அவ்வாறங்குல நீளமும் மற்றைய இடங்களில் ஒவ்வோரங்குல நீளமும் பொருந்தத்தக்கதாக அணிதல் வேண்டும். மூன்று குறிகளின் இடைவெளி ஒன்றையொன்று தீண்டினாலும் மிக அகன்றிருப்பினும் வளைந்திருப்பினும் குற்றமாகும் எனச்சைவச் சான்றோர் கூறியுள்ளனர். விபூதியை அணியும் போது வடக்கு முகமாக வேனும் கிழக்கு முகமாகவேனும் பார்த்துக்கொண்டு நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து சிவசிவ என்று சொல்

லிக் கொண்டு வலதுகையின் நடு விரல் மூன்றினாலும் பயபக்தி யுடன் அணிதல் வேண்டும் நடந்துகொண்டும் படுத்துக் கொண்டும் வாயைத் திறந்து கொண்டும் தலையைக் கவிழ்த் துக்கொண்டும் விபூதியை அணி தல்ஆகாது. ஒருவிரலினாலே விபூதியை அணிதல் பெரும் பாவமாகும்.

குரு, சிவனடியார் போன் றோரிடமிருந்து பெறும் விபூதி தெய்வத் தன்மை பொருந்தியது அவர்கள் நடமாடும் தெய்வங் கள் அத்தகையோர் விபூதி தரும் போது அடக்கத்துடனும் பணி வுடனும் இடதுகையின் மேல் வலதுகையை வைத்து இருகை களையும் நீட்டி வாங்கி அணி தல் வேண்டும். சுவாமிக்கு முன் பும் குருவிற்கு முன்பும் சிவாக் கினி முன்பும் சிவனடியார் முன் பும் திருநீறு அணிதலாகாது. அவர்களுக்கு எதிர்முகமாக நின்று அணிதல் வேண்டும். கோயிலில் பிரசாதமாகக் கொடுக்கப்படும் திருநீற்றை மருந்து போல் பேணிச்சிறி தளவு வாயிலிட்டு நெற்றியிலே பூசுதல் நமது வழக்கமாகும். சிவபெருமானின் நெற்றிக்கண் ணைக் குறிப்பதற்காக நாம் நெற்றியிலே சந்தனத்தையும் குங்குமத்தையும் பொட்டாக அணிகின்றோம். பிரசாதமாகக் கிடைக்கும் திருநீறு, சந்தனம் குங்குமம் ஆகியவற்றை வீட்டிற் குக் கவனமாக எடுத்துச் சென்று வேறொரு நேரம் அணிதல் சாலச்சிறந்ததாகும்.

விபூதி தரிக்கும் காலங் களை எடுத்து நோக்கும் போது சந்தியா வந்தன காலங்களிலும் சூரிய உதயத்திலும் சூரியன் மறையும் போதும் நீராடியவுட னும் கடவுள் வழிபாட்டிற்கு முன்னும் பின்னும் துயில் கொள் வதற்கு முன்னும் பின்னும் மல சல மோசனம் செய்து சுத்தி கரித்து ஆசமனம் செய்த பின் னும் சிவபூசை, யாகம், பிதிர்க் கடன், தானம், திருமணம் முத லான விசேட நிகழ்ச்சிகளின் பொழுதும் வெளியே செல்லும் பொழுதும் விபூதியைத் தரித்தல் அவசியமாகும். விபூதி அணியாத வனுடைய முகம் சுடலைக்குச் சமமாகும் என்று கூறுவார்கள். விபூதியை அணியாமல் நற்கரு மங்கள் செய்யப் புகுந்தால் அக் கருமங்கள் முற்றுப் பெறாதன வாய் இடையில் நின்று பெருந் துன்பத்தை விளைவிக்கும் என் பார்கள். அவர்களின் அறிவு, ஆசாரம், சத்தியம் முதலியன வும் குன்றும் அவர்களைக் காணின் சைவச் சான்றோர் அஞ்சி அகன்று விடுவார்களாம் என்று கூறப்படுகிறது.

[தொடரும் ...

# ஒரு கணம் உன்னோடு

சி. யோகேஸ்வரி

மனமே, உனக்கு இவ்வளவு ஆசை ஆகாது. ஆண்டவனின் அடியிணையில் அரைக் கணம் நிலைக்க மறுக்கும் நீ, பணம் என்றதும் எப்படிப்பறக்கிறாய்?

பணம் வேண்டும், பணமிருந்தால் எதனையும் சாதிக்கலாமென நம்பும் நீ அது வேண்டுமென்று எவ்வளவு ஆசைப்படுகிறாய்.

''பணத்தினால் பலரும் தாம் நினைத்ததைச் சாதிக்கிறார்கள்; உண்மையையும் நேர்மையையும் கூட விலைக்கு வாங்குகிறார்கள்' என நீ நினைக்கிறாய்

ஆனால் பராபரத்தை விடப் பணம் பெரிதோ சக்திவாய்ந்ததோ அன்று, இதை உணர்வது தான் உனக்குப் பெரிய கஷ்டமாக இருக்கிறது.

இந்த யுத்த பூமியில் முதல் நாளிருந்த மாடிவீடுகள் அடுத்த நாள் மண்மேடாவதையும், சேர்த்த பொருள் சிதைந்து போவதையும் கண்கூடாகப் பார்க்கிறாய். இந்த நிமிடம் அதிகாரம் செலுத்தும் பணக்காரன் மறுநிமிடம்மரணத்தைத் தழுவிக்கொள்ள அவனது பணம் யாருக்கோவாகிப்போகிறது.

இதையெல்லாம் பார்த்த பின்னும் பணத்தினால் எதையும் சாதிக்கலாம் என்ற எண்ணத்தை உன்னால் மாற்றமுடியவில்லை. உனக்கு எப்படி இந்த உண்மையைப் புரியவைக்கலாம்!

மண், பெண், பொன் இந்த மூன்று ஆசைகளும் எம்மைப் படாதபாடுபடுத்தும், அந்த ஆசைகளை அறுப்பது - ஆணிவேருடன் முழுமையாக அகற்றுவது முடியாத காரியம் என்பார்கள். உன்னுள்ளே குடிபுகுந்துள்ள இந்த ஆசைகளை அடியோடு அகற்றியே ஆகவேண்டும்.

இந்த மாயைகளின் பின் அலையப் போகிறாயா? இவை உன்னுள்ளே குடிபுகுந்ததும் உன்னிடமிருந்த நற்குணங்களெல்லாம் வெளியேறிவிட்டனவே! அதுகூட உனக்குப் புரியவில்லையா? பணத்திற்காக, பக்கத்

நல்லதையே பேசு அல்லது மௌனமாக இரு

திலுள்ள காணிக்காகப் பொய் யுரைக்கிறாய், உற்றநண்பனுக் குக்கூடக்கேடு விளைவிக்கிறாய் பெற்றதாயிடம் கூடக்கரவும் வஞ்சகமுமாகப் பழகுகிறாய். நம்பிக்கைத் துரோகமிழைக்கி றாய். மனிதப்பண்புகளை ஒவ் வொன்றாகக் கைவிட்டு மிருக மாகி விடுகிறாய். இது தவறு என்று உனக்குப்புரியவில்லையா?

மிருகமாக நீ மாறிய பின் தரப்படும் மதிப்பினாலும் மரி யாதையினாலும் என்ன பயன்? அவை முகத்திற்கு முன் கிடைக் கும் மரியாதையே தவிர உண் மையானவையல்ல அந்தப்பக்கம் போனதும் அரைக் கணத்தில் அந்த மரியாதை காட்டியவனே தூற்றுவான்.

இந்த ஆசைகளை விட என்ன செய்யவேண்டும் தெரி யுமா? பற்றற்றான் பற்றினைப் பற்ற வேண்டும். ஆம் ஆண்ட வனிடம் நீ பற்று வைக்கப்பழகு அவனடியில் முழுமையாகச் சர ணடை அது ஒன்றே உன்னை ஈடேற்றும்.

## மதம் மாறுவதால்

ஒருவன் முற்பிறப்பிற் செய்த பாவபுண்ணியத்திற்கு ஏற்ற வகையிலேயே இப்பிறவியில் அவனது வாழ்க்கை அமையமுடியும் மதம் மாறுவகால் ஒருவர் தனது வாழ்க்கைப் பாதையைத் தான் நினைத்தவாறு மாற்றியமைக்கமுடியாது என்பதை நாம் எமது நிகழ் கால வாழ்க்கையில் நடப்பவற்றின் மூலம் நன்கு உணரமுடிகின்றது.

இந்துமதத்திலிருந்து வேறு ஒரு மதத்திற்கு மாறுவதன் மூலம் தனது வாழ்க்கைப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியுமென ஒருவர் நம்பினார் அவ்வாறே மதமும் மாறினார் ஆனால் அவருடைய பிள்ளைக்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளது அந்தப்புற்று நோயையோ அல்லது அவருக்குள்ள வறுமையையோ யாராலும் தீர்க்கமுடியாத நிலையில் அந்தநபர் புற்றுநோய்க்கு உட்பட்ட பிள்ளைக்காக உதவு மாறு இறுதியில் அரசாங்கத்திடம் விண்ணப்பித்துள்ளதை நாம் பார்க்க முடிகின்றது.

இதே போல நீண்டகாலம் நடை பெறாதிருந்த ஒருவருடைய திருமணம் மதம் மாறியதால் நடைபெற்றது, ஆனால், அவர்களுக்குக் குழந்தைப்பாக்கியம் கிடைக்கவில்லை அறியாமைக்குட்பட்ட இப்படிப் பட்டவர்களின் பரிதாப நிலைக்காக நாம் இரங்குவதுடன் மட்டும் நின்று விடாது இவர்களை எமது மதம் மீண்டும் அழைத்து அர வணைத்து உதவி செய்வது விரும்பத்தக்கது.

**மதிப்பீட்டுரையில் கரவெட்டி பிரதேசசெயலர் திரு. செ. ஸ்ரீனிவாசன் அவர்கள்**

உ

# குருபக்தி

செல்வன் கு. குணாளன்

**ப**க்தி மூன்று வகைப்படும் ஒன்று தெய்வபக்தி, இரண்டாவது அடியார் பக்தி மூன்றாவது குருபக்தி. அடியார் பக்தியைக் காட்டிலும், தெய்வபக்தியைக் காட்டிலும் குருபக்தியே சாலச் சிறந்ததாகும்.

தெய்வத்திடம் செய்த பாவம் குருவிடம் தீரும். குருவிடம் செய்த பாவம் தெய்வத்திடம் தீராது. நம்முடைய ''கரு மேனியை மாற்ற வந்தது குருவின் திருமேனி'' குருபக்தியால் உயர்ந்தவர்கள் பலர் உள்ளனர். ஆனால் குருவை இம்சித்தவர்கள் வாழ்க்கையில் உயர்ந்து வாழ்ந்தார்கள் என உலக வரலாற்றிலேயே கிடையாது.

**குருபக்தியால் உயர்ந்தவர் ஒருவர் ஆருணி.**

ஒருகாலகத்தில் அயோத தௌமியர் என்ற ஒரு தபோதனர் பல மாணவர்களை ஒன்று சேர்த்து ஒரு குருகுலத்தை நடாத்திவந்தார். பலதிறப்பட்ட மாணவர்கள் அங்கு கலை பயின்று வந்தார்கள். அம் மாணவர் குழாத்தில் 'ஆருணி' என்ற பாஞ்சால, இராசகுமாரன் முதன் மாணவனாகத் திகழ்ந்தான்.

ஒருநாள் குருநாதர் ஆருணியை நோக்கி 'எமது குருகுலத்துக்குச் சொந்தமான வயலில் தண்ணீர் பெருகி வயலிற் பயிர்கள் அழிகின்றன. ஆதலால், நீ போய் மடையை அடைத்து விட்டுவா' எனக் கட்டளை இட்டார். அவனோ இராசகுமாரன் 'பெருஞ் செல்வம் படைத்தவன் வயல்வேலை செய்யத்தான் செல்வதா? என்று எண்ணினானில்லை குருவின் கட்டளையைச் சிரமேற் கொண்டு மண்வெட்டியுடன் வயலை நோக்கிப் புறப்பட்டான்

அங்கு மடையைத் தன்னால் இயன்ற வரைக்கும் அடைக்கப் பார்த்தான். மடை அடைபடாமல் உடைந்தவண்ணமே இருந்தது. காலை முதல் மாலை வரையும் மடை அடைபடாது இருந்தது. ஆருணி உடல், உள்ளம் சோர்வுற்றான். குரு இட்ட கட்டளையை நிறைவேற்றாத நான் இன்னமும் இருக்கவேண்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

டுமா? என எண்ணிப் பெருமூச்சு விட்டான். சிறிது நேரம் சிந்தித்தான் குருநாதன் பணியில் இந்த உடலையே தியாகம் செய்து விட வேண்டும் என்று எண்ணினான் தண்ணீரை எதிர்த்து மடையிலே படுத்துவிட்டான். மடையும் அடைபட்டது

அன்றிரவு குரு விளக்கின் முன் அமர்ந்து மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். முதல் வரிசையில் பயபக்தியுடன் இருந்து பாடம் கேட்கும் ஆருணியைக் காணாது திகைத்தார். ''மாணவர்களே உத்தமகுணம் படைத்த ஆருணி எங்கே?'' எனவினவினார் 'ஒரு மாணவன் குருவே அவன் காலையில் வயலுக்கு மடை அடைக்கச் சென்றான். திரும்பவரவில்லை' எனக் கூறினான். குருநாதர் தீவர்த்தியுடன் மாணவர்கள் சகிதம் வயலுக்குச் சென்றார். அங்கு ஆருணியை எங்கு தேடியும் காணாது திகைத்தார். கனிந்த சிந்தையுடன் அன்பொழுக, ''ஆருணி, ஆருணி என அழைத்தார். ஆருணி தண்ணீரில்இருந்த வண்ணம் குருநாதா அடியேன் தண்ணீருக்குள் படுத்திருக்கிறேன் என்றான்''.

குருநாதர் ''அப்பா! அன்புள்ள மாணவனே! தண்ணீரில் என் படுத்திருக்கிறாய்? என வினவினார். ஆருணி ''குருநாதா அடியேன் காலை முதல் மாலை வரை மடையை அடைக்கப் பார்த்தேன் அது அடைபடவில்லை மடையில் அடியேன் படுத்து விட்டேன் என்னைத் தாண்டுவதற்கு அஞ்சிய தண்ணீர் தேங்கி நின்றுவிட்டது. அதனால் அடியேன் மடையிலே படுத்திருக்கிறேன்'' என்று கூறினான்

அவனது குருபக்தியையும், அவனைத் தாண்ட அஞ்சிநிற்கும் தண்ணீரையும் கண்ட எல்லோரும் அதிசயித்து நின்றார்கள். குருநாதர் 'ஆருணிஎழுந்து வா'எனக் கட்டளை இட்டார். ஆருணி தண்ணீரைப் பிளந்து கொண்டு வந்தான். அதனால் அவன் ''உத்தாலகன்'' எனப் பெயர் பெற்றான். 'உத்தாலகன்' என்னும் சொல்லுக்குத் தண்ணீரைப் பிளந்தவன் என்பது பொருள்.

குருநாதன் அவனை அருட்கண்ணாற் பார்த்தருளி ''உனக்குச் சகல கலைகளும் சித்திப்பதாக! நீ மெய்ஞ்ஞான செல்வத்தைப் பெற்றுமேன்மையுடன் விளங்குவாயாக'' என்று ஆசி கூறினார்.

உத்தாலகன் குருவின் திருவருளைப் பெற்றுப் பலகாலம் தவம் செய்து தவசீலனாக விளங்கினான். பலப்பல மாணவர்களுக்கு ஞானோபதேசம் செய்து ஞானாசிரியனாகத் திகழ்ந்தான்.

இவ்வாறு குருபக்தியில் நின்று திகழ்ந்து வாழ்க்கையில் ஒளிவீசிய பலரது கதைகள் சரித்திரத்தில் இருக்கின்றன. குருபக்தியால் வாழ்க்கையில் கீழ் நிலைக்குச் சென்றவர்கள் எவருமே இவ்வுலகில் கிடையாது. எனவே இப்படியான குருபக்தி உள்ள மாணவர்களாக நாமும் திகழ்ந்து ஆருணிபோன்றசிறந்த நல்மாணாக்கர்களாக வாழ்க்கையில் ஒளிவீச வேண்டும் என்பதே எனது பேரவாவாகும். மாணவர்களாகிய நாம் எச்சந்தர்ப்பத்திலும் குருபக்தியை மறவாது ''ஆசானை காண்தொறும் அன்புருகக் கைகுவியும்'' - என்ற சிவ ஞானப்பிரகாச வெண்பாவினை மனத்தில் நிறுத்தி குருவைப் போற்றி நடப்போமாக!

---

- ஞானியின் நிலை ஒரு குழந்தையைப் போன்றது. அவன் இறைவனுடைய பேரானந்தத்தைத் தன் உள்ளத்தில் தெளிவாகவும் அதிகமாகவும் அனுபவிக்கிறான்.
- விஷயானந்தம், பஜனானந்தம், பிரம்மானந்தம் என்று ஆனந்தம் மூன்று வகைப்படும். பெண், பொன் ஆகியவற்றால் கிடைக்கும் ஆனந்தமே விஷயானந்தம் எனப்படும். இறைவனது பெயரையும் புகழையும் பாடுவதால் ஏற்படும் ஆனந்தம் பஜனானந்தம் எனப்படும். இறைவனது காட்சியால் ஏற்படும் ஆனந்தம் பிரம்மானந்தம் எனப்படும்.
- இடைவிடாமல் இறைவனை நினைத்து மனதை எல்லையற்ற இறைவனிடம் ஒன்ற வைப்பதால் ஆனந்தமே கிடைக்கும்.
- எங்கு முழுமையாக மனம் ஒன்றிவிடுகிறதோ அந்த நிலையில் ஞானிக்கு 'நான்' என்பது மறைந்து ஜடசமாதி கிட்டுகிறது.
- இறைவனிடம் யார் எதை விரும்புகிறார்களோ அதைப் பெறுகிறார்கள்.
- இறைவன் கற்பக மரம் போன்றவன். எவன் எதை விரும்புகிறானோ, அதை அவன் இறைவனிடமிருந்து பெறுகிறான்.
- இறைவன் நமது எண்ணங்களை மட்டுமே பார்க்கிறான்.
- ஒருவனின் எண்ணம் எப்படியோ, அப்படியே இறைவனும் அவனுக்கு அருள் புரிகிறான்.
- பக்தி மார்க்கம் எளிதானது. ஞான ஆராய்ச்சி மார்க்கம் மிகவும் கடினமான பாதை. மனம் அழிந்தால் இறைவனைப் பற்றிய ஞானம் உண்டாகிறது.
- பொருட்பற்று ஒரு சிறிது இருந்தாலும் கூட அருவக் கடவுளை அனுபூதியில் உணர முடியாது.

காலம் தவறினால், எல்லாம் தவறாகும்.

# ஆறுமுகமான பொருள்

சி. நவரத்தினம்

மேற்படி தலைப்பைக் கொண்ட முதலாவது கட்டுரையில் முருகப்பெருமான் மயில் மீது ஏறி உலகத்தைச் சுற்றி வந்த திருவிளையாடலைப் பற்றியும் இரண்டாவது தொடரில் ஈசனுடன் ஞான மொழி பேசிய திருவிளையாடலைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். இக் கட்டுரையில் முருகப்பெருமான் தம்மை மனமுருகிப் பாடியும் நினைந்தும் வழிபடுவோர்களுடைய வினைகளை எவ்வாறு தீர்த்து அருள் புரிந்தார் என்பது பற்றிச் சிந்திப்போமாக!

## கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகமொன்று

முருகப்பெருமானின் அருள் பெற்று வினைகளை நீக்கிய அடியவர்களின் எண்ணிக்கை அளப்பில. எனினும் அவன் அருள் பெற்று வினைகளை அறுத்த சில அடியவர்களின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறி விளங்க வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குறிப்பாக அருணகிரிநாதர், நக்கீரர், ஔவையார் முதலானோருக்கு முருகப் பெருமான் எவ்வாறு அருள் புரிந்தார் என்பதை நோக்குவோம்.



அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் செல்வந்தர் குடும்பம் ஒன்றிற் பிறந்தார். அவர் செல்வத்தில் திளைத்த போதிலும் முருகப்பெருமான் மீது மிகுந்த பக்தியுடையவராக வாழ்ந்தார். அழகும், இளமையும் ஒருங்கே அமையப் பெற்ற

தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.

அவர் பெண்களின் சேர்க்கையால் தமது செல்வம் முழுவதையும் இழந்தார். அவரிடம் பொருட்செல்வம் இல்லை என்பதை அறிந்ததும் அவருடன் முன்னர்ப் பழகிய கணிகையர் அனைவரும் அவரை வெறுத்து ஒதுக்கினர். பெண்களின் சேர்க்கையால் அவருக்குத் தொழு நோய் ஏற்பட்டதும் அவரைக் கண்ட எல்லோரும் தூர ஓடிச் சென்றனர். இதனால் மனமுடைந்த அவர் தான் செய்த தவறுகள் முழுவதையும் முருகப் பெருமானிடம் முறையிட்டு அவரிடம் பூரணசரணாகதி அடைந்தார். தன் உயிரை வெறுத்த அருணகிரிநாதர் ஒருநாள் திருவண்ணாமலைக்கோயிற் கோபுரத்தின் உச்சியிலிருந்து வீழ்ந்து தற்கொலை செய்ய முற்பட்ட போது முருகப்பெருமான் அவரை ஏந்தி நிலத்தில் விடுத்துச் ''சும்மா இரு சொல்லற'' என்னும் மௌன மந்திரத்தை உபதேசித்து ஆட்கொண்டருளியதுடன் திருப்புகழ் பாடப் பணித்து ''முத்தைத் தரு'' என்று பாடும்படி அடியெடுத்துக் கொடுத்தார்.

இவரது வரலாற்றிலிருந்து நாம் சில உண்மைகளை உணர்ந்து கொள்ளலாம். அதாவது எவ்வளவு கெட்டவர்களாக இருந்த போதிலும் முருகப் பெருமானிடம் பூரண சரணாகதியடைந்தோரை அவர் ஓடிவந்து காத்து அவர்களது வினைகளைப் போக்கி அருளுவார் என்பதும், பணம் உள்ள போது உறவாடுபவர்கள் பணம் இல்லை என்றதும் எம்மை விட்டுத் தூரவிலகி விடுவார்கள் என்பதுமாகும். எனவே, இது ஒரு போலி வாழ்க்கை ''பணமுண்டானாற் பிணமும் வாய்திறக்கும்'' என்ற முதுமொழியை இது ஞாபகமூட்டுகிறது.

''நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்று கூறிய நக்கீரதேவரும் ஒரு சிறந்த முருகனடியாராவார். இவர் சிவபிரானுடன் வாதிட்ட பாவத்தைப் போக்கத் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டார். இவர் திருப்பரங்குன்றத்திலுள்ள குளக்கரையில் உள்ள அரசமரத்தின்கீழ் சிவபூசை செய்துகொண்டிருந்தார். அவ் அரச மரத்திலிருந்து உதிர்ந்த அரசமிலையின் ஒருபகுதி நீரிலும் மறுபகுதி நிலத்திலும் படும்படி விழுந்திருந்தது. நீரில் விழுந்தபகுதி மீனாகவும் நிலத்தில் வீழ்ந்த பகுதி பறவையாகவும் மாறி ஒன்றை ஒன்று இழுத்துக்கொண்டிருந்தன. இச் செயலில் இலயித்துக் கொண்டிருந்த நக்கீரர் சிவபூசையை மறந்தார். சிவபூசையில் தவறியவர்களை உண்ணும் விரதமிருந்த கற்கிமுனி என்ற பூதம் ஏற்கெனவே பிடித்து அடைக்கப்பட்ட தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது

பகை நடுவில் தீயும் இருக்கும்.

பேருடன் இவரையும் சேர்த்துக் குகையில் அடைத்தது. நக்கீரர் தன் விரதத்தை முடிக்கும் பொருட்டு நீராடச் சென்ற வேளையில் ஏற்கெனவே அக் குகையில் அடைக்கப்பட்டிருந்த வர்களின் வேண்டுகோளுக்கிணங் கத் தனது தெய்வமாகிய முருகப் பெருமானை நினைந்து திருமுரு காற்றுப்படையைப் பாடினார். உடனே முருகன் தோன்றித் தன் கை வேலாற் குகையைப் பிளந்து பூதத்தைக் கொன்று அக்குகை யில் அடைபட்டிருந்த எல்லோ ரையும் விடுவித்தருளினார்.

இவரது வரலாற்றிலிருந்து அறியக் கூடியது யாதெனில் முரு கப்பெருமான் தன் அடியவர் களின் வேண்டுதலை ஏற்று அவர் களின் வினைகளைப் போக்கி ஆட்கொண்டு அருளுவார் என்ப தும் '' நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை '' என்பது போல ஒரு நக்கீரதேவரின் பக்தியினால் அக்குகையிலிருந்த தொளாயி ரத்துத் தொண்ணூற்று ஒன்பது பேரும் முருகப்பெருமான் அரு ளால் விடுவிக்கப்பட்டனர் என் பதுமாகும்.

ஔவைப்பிராட்டி ஒரு முருக பக்தை. அவரின் வித்துவச் செருக்கை அடக்கவும் அவரின் தமிழ்ப்புலமையை உலகறியச் செய்யவும் விழைந்த முருகப்பெரு மான் நாவற்பழம் கொடுத்து ஒரு திருவிளையாடலை நிகழ்த்தி யுள்ளார். ஔவையார் ஒரு காட்டு வழியாகச் சென்றார். வெயிலின் கொடுமையினால் அவ்வழியிலிருந்த ஒரு நாவல் மரத்தின் கீழ் இளைப்பாறினார். இடைச்சிறுவனாக அந்நாவல் மரத்தின் மேலிருந்த முருகப் பெருமான் நாவற்பழங்களைப் பறித்து உண்டு கொண்டிருப் பதைக் கண்ணுற்றார். சிறுவன் பாட்டியை நோக்கிப் '' பாட்டி பாட்டி சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டான். பாட்டியும் பழங்களுக்குள் சுட்டபழம் சுடாத பழம் என்ற வேறுபாடு இருக்கின்றதா என்று சற்று யோசித்து விட்டுச் சுட்ட பழம் வேண்டும் என்று கேட்டார். சிறுவனும் நன்றாகப் பழுத்த பழங்களைப் போட்டான். அப் பழங்களில் மண் ஒட்டிக்கொண்ட தாற் பாட்டி பழங்களிலிருந்த மண்ணைப் போக்க நன்றாக ஊதினார். அப்பொழுது அச் சிறுவன் '' பாட்டி, பாட்டி, பழம் சுடுகிறதா '' என்று கேலி செய்தான். இந்தச் சிறுவன் தன்னை மடக்கி விட்டானே என்று வருந்திய ஔவைப் பிராட்டி '' தம்பி நீ யார்? '' என்று கேட்டார். சிறுவனாக நின்ற முருகப்பெருமான் மயில் வாகனனாகக்காட்சி கொடுத்துப் '' பாட்டி அரியது எது? கொடி யது எது? பெரியது எது? '' என்று கேட்டார் பாட்டியும்

உன் கண்கள்தான் உன் உடலுக்கு விளக்கு.

''அரிது அரிது மானுடராதல் அரிது '' என்று பாடத்தொடங்கிப் பாடினார். கொடிது எது? என்பதற்குக் கொடிது கொடிது வறுமை கொடிது என்று பாடினார். பெரியது எது? என்பதற்குப் பெரிது பெரிது புவனம் பெரிது என்று பாடினார். இவ்வாறு ஒளவைப்பாட்டியைப் பாடச் செய்து அவரின் தமிழ்ப் புலமையை உலகறியச் செய்தார் முருகப்பெருமான்.

மேலும் ஐந்து வயதுவரை வாய்பேச முடியாமலிருந்த குமரகுருபரரை வாய்பேசச் செய்தார் இதன் பேறாகக் குமரகுருபரர் கந்தர் கலி வெண்பா என்னும் மெய்ஞ்ஞானப் பிரபந்தத்தைப் பூமேவு செங்கமலப் புத்தேளும் என்று தொடங்கிப் பாடியருளினார்

இக் கலியுகத்தில் சந்நிதி முருகப்பெருமான் தன் அடியவர்களின் வினைகளைப் போக்கி அவர்களை இரட்சித்து அருளியமை பற்றி மாதாந்தம் வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச் சுடர்ச்சஞ்சிகையிலேசந்நிதியான் என்ற தலைப்பின் கீழ் வெளிவந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம் மேலும் மயில் வாகனம் சுவாமிகள், முருகேசுசுவாமிகள் முதலான அடியவர்களின் வினைகளைப் போக்கி அவர்களுக்கு நற்கதி வழங்கிய செய்தியையும் நாம் அறிவோம்

ஆகவே, இவ்வாறு முருகப் பெருமான் தன் அடியவர்களின் வினைகளைப் போக்கி அவர்களுக்கு நற்கதியை வழங்கியுள்ளார் என்பதைக் கூறுமடியார்கள் வினைதீர்க்குமுகமொன்று என்ற இத்தலைப்பின் கீழ் எழுதப்பெற்றஇக்கட்டுரையின்மூலம் உணர்ந்து நாமும்சந்நிதி முருகன் அருளைப் பெற்று எமது வினைகளை அறுத்துப் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று உய்வோமாக! (தொடரும்...

---

## நாளுமுன் வீட்டில் நல்லது நடக்கும்

நாளுமுன் வீட்டில் நல்லது நடக்கும்
நாவாரச் சந்நிதி முருகனைப் பாடு
நாளைய சந்ததிக் கென்றொன் றுரைப்பேன்
நம்பினால் நம்புங்கள் சந்நிதி தேன்கூடு
ஆளுந்திற னெதுவாக யாருக்கு முண்டெனினும்
அழகுதிரு முருகனை யார் மறப்பார்?
அளவோடு வாழநீ எளிமையைத் தேடு
அன்னதானக் கந்தன் என்றும் உன்னோடு.

கே. எஸ். சிவஞானராஜா

---

நினைப்பதெல்லாம் சரி என்று முடிவெடுக்காதே.

தொடர்ச்சி...

# ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் திருத்தல புராணம்

சி. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள்

நீராகி நிலமாகி நிகழ்தீ யாகி
நிறைகாலாய் நீண்டபெரு விசும்பாய் வேதப்
பேராகிப் பொருளாகிப் பிறங்கு ஞானப்
பிழம்பாகிப் பிரபஞ்சப் பெருக்க மாகிச்
சீராகித் தாவரசங் கமங்க ளாகித்
திகழுமெமைச் சிந்தனையிற் றெளிந்த பக்திக்
கூராகி வழிபடுவோர் இதயக் கோயில்
கொண்டுறைவோம் குறிப்புணர்ந்து கொள்ளு வாயே 99

அன்பென்ற மஞ்சனநீ ரமைய வாட்டி
அன்பென்ற தூயமல ராரம் சூட்டி
அன்பான திருவமுது நிறையக் கூட்டி
அன்பான சோதியினா லார்த்தி காட்டி
அன்பாலே யனைத்துயிர்க்கு முறவு பூட்டி
அன்பாலே புணுமுனைவி லடியார்க் கூட்டி
அன்புநெறி நின்றுகலை யறிவை நாட்டி
அன்புருவ மானவர்நல் லருள்பெற் றாரே. 100

நம்மருளால் நமையுணர்ந்தோர் ஞான வீட்டு
நானெறியிற் பயில்கின்ற நன்மை சேர்வர்
இம்மையிலே குறைவின்றி இனிது வாழ்வர்
இகபரசெள பாக்யசுக இதயம் பூண்பர்
செம்மையெனும் சிவம்பரவும் செயன்மேற் கொள்வர்
திருத்தொண்டர் கூட்டத்துட் சிறக்க நிற்பர்
அம்மையையும் அப்பனையும் அகத்திற் காணும்
ஆனந்த தாண்டவத்தி னணிகாண் பாரே 101

பரவுமுறை பத்திமுறை பாடுமுறை யாடுமுறைப்
பான்மை யெல்லாம்
அரவுபிறை யணிந்தாடும் அம்பலவன் திருமைந்தன்
ஆங்கு நாளும்
இரவுபகல் எடுத்தியம்ப, எஞ்ஞானந் தானுமில்லா
தெழுபி றப்பும்
குரவுபுனை குருபரனாற் றொலைக்கவரும் கதிர்காமர்
குளிர்ந்துகேட்டார். 102

மிகச் சிறந்த மனிதன் அன்புள்ளவன்.

உ

# திருத்தல புராணம்

99) முருகனுக்குக் குகன் என்பது சிறந்த நாமம், இருதயமாகிய குகையிலே உறைவதால் அவனுக்குக் குகன் என்று பெயர். இதனைக் கதிர்காமருக்கு விளக்குகிறார். ' கதிர்காமரே யான் சொல்வதைக் கேட்டுத் தத்துவக் குறிப்பை உணர்ந்து கொள்ளும் யாம் நிலம் நீர், தீ. காற்று ஆகாய மென்றபஞ்ச பூதமாகியும், வேதங்களிற் கூறப்படும் பற்பல பெயருடை யோமாகவும், ஞானசோதிப் பிழம்பாகவும், பிரபஞ்சத்திற் செயற்படும் மூர்த்திகளாகவும், தாவர சங்கமப் பொருட்களாகவும் திகழுவோம். சிந்தனையில் தெளிந்த பக்தியின் விளைவாக எம்மைக் காண்போரின் இதயக் கோயிலில் உறைவோம்.

100) எம்மிடத்துத் திருவருள் பெறுபவர் யார் என்பதைக் கேட்பாயாக அன்பென்ற திருமஞ்சனத்தால் அபிஷேகம் செய்வோர் அன்பு மலரால் அர்ச்சிப்போர் அன்பு மாலை சாத்துவோர் அன்பென்ற அமுதுதந்து அன்பு வளர்சோதி ஆராத்தி எடுப்போர். மற்றைய உயிர்களுக்கு அன்புறவு காட்டி தாமுண்ணும் உணவில் அடியார்க்கும் கொடுத்து, அன்பாகக் கலையறிவை ஊட்டி அன்பு நிலையில் நிற்பவர்கள் இவர்களே எமது திருவருள் பெற்றவர் ஆவர்

101) எம் அருளாலேதான் எமை உணரவேண்டும். அவ்வாறு உணர்ந்தவர்கள் ஞான வீடு பெறுவர் நான்கு பாதங்களால் வரும் நாற்கதிகளும் அவ்வவர் நிலைக்கேற்பப் பெறுவர் இப்பிறப்பிலேயே குறையிலா வாழ்வுபெற்று இம்மைக்கும் மறுமைக்குமாகிய சுகம் அனுபவிக்கும் மனோதிடம் பெறுவர் சிறப்பான சிவசமயப்பணிகள் புரிவர், அவர்களே திருத்தொண்டர் கூட்டத்திற் சிறந்தவர்களாக விளங்குவர். மேலும், இவர்களே அம்மை அப்பனை (தாண்டவம் செய்யும் சிற்பரத் தோற்றங்களை) உள்ளத்திற் காணக் கூடியவர்கள் ஆவர்.

102) இவ்விதமாக முருகன் கதிர்காமருக்கு வழிபடும் முறை, பக்தியின் வழிகள் பாடுகின்ற விதங்கள், ஆனந்தத்தால் கூத்தாடும் நிலைகள் இவற்றை இரவு பகலாகக் கூறுவர். எஞ்ஞானமும் இல்லாத கதிர்காமர், முருகன் அருளால் பிறப்பறுக்க உகந்த நற்பிறவி நிலையெய்தி, மிகக்கவனமாகக் கேட்டுணர்ந்து மனங்குளிரும் வாய்ப்பைப் பெற்றார்.

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

# கௌரவர் சபையிற் கண்ணன்

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்

கண்ணபிரான் அஸ்தினாபுரிக்கு வருகை தருகிறார் என்பதனை அறிந்த நகர மாந்தர் மிகவும் மகிழ்வு கொண்டவராய் நகரை அலங்கரித்துப் பெரும் வரவேற்புபசாரவைபவங்களை நிகழ்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யலாயினர். கிருஷ்ண பகவான் அஸ்தினாபுரியை அடைந்த போது விதுரர், துரோணர், பீஷ்மர் முதலானோர் அவரைக் குதூகலத்துடன் வரவேற்றனர். கிருஷ்ண பகவானை வரவேற்பதற்குத் துரியோதனன் வந்திருக்கவில்லை. கிருஷ்ணபகவான் விதுரரின் இல்லத்தில் தங்கியிருப்பதனை விரும்பியவராய் விதுரரின் மாளிகையில் தங்கலானார். கண்ணபிரான் தனது மாளிகையில் தங்கியமையாற் பெருமகிழ்வு கொண்ட விதுரர் தகுந்த முறையில் அவரை உபசரித்துப்பெரும் விருந்தொன்றை அவருக்கு அளித்து மனமகிழ்வு கொண்டார். கண்ணபிரான் அஸ்தினாபுரிக்குத் தனது வருகையின் நோக்கத்தையும் பாண்டவர் மனோ நிலையையும் விதுரருக்கு எடுத்துரைத்தார். அப்பொழுது விதுரர், ''கண்ணா துரியோதனன் மூடன், பெரியோரை மதிக்கும் பண்பில்லாதவன், அவன் நீர் உரைப்பதனைச்செவிமடுத்து நடக்க மாட்டான். எனவே, அரசவைக்குச் சென்று அவனைச் சந்திக்க வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டார். விதுரரின் உரைகளைச்செவிமடுத்த கண்ணபிரான் ''விதுரரே, துரியோதனனின் குணவியல்புகள் எனக்கு நன்றாகவே தெரியும். ஆயினும், போர் எனும் பேரழிவு ஏற்பட்டு அரசகுலமும் மக்களும் அழிந்து போகா வண்ணம் காப்பது என் கடமையாகிறது. அத்துடன் கிருஷ்ணர் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையில் சமாதான முயற்சியில் ஈடுபடவில்லை என்ற பழிச்சொல் எனக்கு ஏற்

படக்கூடாது என்று நான் விரும்புகிறேன். எனவே நாளை நான் அரசவைக்குச் சென்று துரியோதனனைச் சந்திக்கப் போகிறேன். நியாயமானதும் ஆக்கபூர்வமானதுமான வழிமுறைகளை எடுத்துக்கூறி அவனது கருத்தை அறிந்து கொள்ள முயல்கிறேன். இது தப்பில்லையே '' என்றுரைத்தார். பின்னர் விதுரர் மாளிகையில் தங்கியிருந்த குந்திதேவியைச் சந்தித்துப் பாண்டவர் நலத்தை எடுத்துக் கூறி அவளை மகிழ்வடையச் செய்தார்.

மறுநாள் அரசவையில் துரியோதனனைச் சந்தித்தார். அவையில் திருதராஷ்டிரன் விதுரர், பீஷ்மர், துரோணர் முதலானோர் உடனிருக்கத் துரியோதனன் வீற்றிருந்தான். கண்ணபிரானைக் கண்ணுற்ற அனைவரும் எழுந்திருந்து வரவேற்று வணங்கினர். துரியோதனன், கன்னன் சகுனி முதலானோர் அமர்ந்திருந்த நிலையில் கண்ணனை வரவேற்றனர். புன்முறுவலுடன் கண்ணபிரான் தமக்கென அமைக்கப்பட்டிருந்த பொன்னாசனத்தில் அமர்ந்தார் சபையிற் பெரும் மௌனம் நிலவியது. கண்ணபிரான் திருதராஷ்டிர மன்னனை நோக்கி, ''மன்னா, பாண்டவர்கள் சமாதானமாக வாழ்வதில் விருப்புடையவர்கள். கௌரவர்களும் பாண்டவர்களும் சமாதானமாக வாழ்வதனாற், பெருநன்மை ஏற்படும். அவர்கள் இருசாராரும் ஒற்றுமையாக வாழ்வார்களாயின் அவர்களை இந்நிலவுலகில் யாராலும் வெல்ல முடியாது. ஆனால் கௌரவர்கள் அறநெறியின்றும் வழுவிப் பாண்டவர்களைத் துன்பத்துக்குள்ளாக்கியுள்ளனர். பெரியோராகிய நீரும் அறிந்தும் அறியாதவர் போல் நடந்து கொள்கிறீர். இனி வரும் காலத்தில் அவ்வாறு நீர் நடந்து கொள்ள முயல வேண்டாம். பாண்டவர்கள் தாம் இழந்த நாட்டைப் பெற்று ஒற்றுமையாக வாழவே விரும்புகின்றனர். தமது நாடு தமக்குக் கிடைக்காத விடத்துப் போருக்கும் அவர்கள் தயாராக உள்ளனர். போர் ஏற்படுமாயின் பேரழிவு ஏற்படும் என்பதனையும் உணர வேண்டும். எனவே, நியாய பூர்வமான முறையில் அவர்கட்குரிய பங்கைக் கொடுத்து இருசாராரும் சமாதானமாக வாழவேண்டும். இதனைத் தெரிவிக்கவே நான் இங்கு வந்துள்ளேன்'' என்று உரைத்து நின்றார். கண்ணபிரானின் உரைகளைச் செவிமடுத்த துரியோதனன் ''தூதுவனாக வந்துள்ளநீர் ஓரவஞ்சகமாக நடந்து கொள்கிறீர். எனது அரண்மனையில் தங்காது விதுரர் மாளிகையில் தங்கியிருந்தது ஏனோ?'' என்று ஏளனமாக வினாவினான். அத்துடன் ஈ ஒன்று தங்கியிருக்கும் நிலத்தைக்

கூட அவர்களுக்கு நான் கொடுக்க மாட்டேன். இதுவே எனது முடிபு'' என்று மிகவும் ஆணவத்துடன் மொழிந்தான். துரியோதனனின் இறுமாப்புக் கலந்த உரைகளாற் கடுங்கோப மடைந்த கண்ணன், ''மூடனே! உனக்கு அழிவுகாலம் நெருங்கி விட்டது. அதனாற்றான் அற நெறி பிறழ்ந்து நடக்க முற்படு கிறாய். இதனால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பாரதூர மானவையாக இருக்கப் போகின் றன என்பதனைப் பொறுத்தி ருந்து பார்'' என்று கூறிச்சபை யினின்றும் வெளியேறலானார். துரியோதனன் மென்மேலும் பாண்டவர்களையும் கண்ணனை யும் இகழ்ந்து பேசலானான். அத்துடன் விதுரரை மிகக் கேவ லமாக இகழ்ந்து பேசினான் இத னால் மிகவும் வெகுண்ட விதுரர் ''துரியோதனா, நீதியின்பாற் பிடிப்பற்ற உன்பக்கலில் நின்று நான் போரிட முடியாது'' என்று கூறித் தனது வில்லை ஒடித்து விட்டுச் சபையினின்றும் வெளி யேறலானார்.

விதுரரின் இச் செய்கையி னாற் பீஷ்மர் முதலானோர் மிகவும் வருத்தமடைந்தனர். ஆனால் துரியோதனன் ஒன்றுக் கும் கலங்காதவனாய் வீற்றிருந் தான். வில்லொடித்து விதுரர் நின்றமையாற் கண்ணன் மனத் தில் மகிழ்வு கொண்டார்.

இதன்பின்னர், துரியோதனன் சகுனி முதலானோருடன் கூடி இனியாது செய்ய வேண்டும் என்று ஆலோசனை செய்தான். அப்பொழுது சகுனி, ''துரியோ தனா! பாண்டவர்களின் பெரும் பலம் கண்ணன். அவனை நாம் சிறைசெய்து வைத்து விட்டாற் பாண்டவர்கள் பலமிழந்து விடு வர். நல்ல வேளை கண் ணன் எம்மிடையே இருக்கிறான் எனவே, நாம் விரைந்து செயற் படவேண்டும்'' என்றான். துரி யோதனனும் அதற்கு யாது செய்யலாம் என வினாவச் சகுனி அதற்கும் தகுந்த உபாயம் உள் ளது என்று தனது திட்டத்தை விபரித்தான். திட்டம் செயலு ருப் பெறத் தொடங்கியது.

இரகசியமான இத்திட்டம் சாத்யகிக்குத் தெரியலாயிற்று. அவன் உடனே செய்தியைப் பீஷ் மர், திருதராஷ்டிரன் முதலான பெரியோர்களுக்கு அறிவித்தான் செய்தியறிந்த கண்ணன் புன் முறுவல் பூத்தார். விதுரர் பெரும் வருத்தமடைந்த திருத ராஷ்டிர மன்னனைக் காணச் சென்று, ''மன்னா விநாசகால விபரீத புத்தி என்பது உண்மை யாகிவிட்டது. மாதவனைச் சிறைப்பிடிக்க முயல்கின்றனர் நும் புதல்வர்கள். அதனை நீர் உடனே தடுத்து நிறுத்த வேண் டும்'' என்று வேண்டிக் கொண் டார் திருதராஷ்டிர மன்னன் ஏதும் செய்ய முடியாதவனாய்த் தன் புதல்வரின் செய்கையைத் தடுக்க முடியாதவனாய்த் துயர மடைந்தான். (தொடரும் —

மனிதத் தன்மையைத் தருவது நல்லொழுக்கமே.

# வள்ளுவம் கூறும் இன்சொல்

செல்வி அ. ஆனந்தராஜா

இப் பூவுலகில் மனிதர்களாகிய நாம் விரும்பியோ விரும்பாமலோ பிறந்து விட்டோம். நாம் வாழும் இக்குறுகிய காலப் பகுதியில் எம்மால் இயன்றளவு நல்ல காரியங்களைச் செய்தல் வேண்டும். ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம் இறந்தோம் என்று இருப்பதற்காகவா? இவ் அரிதான மானுடப் பிறப்பை இறைவன் எமக்களித்தான என நாம் சிந்தித்தல் அவசியம்.

நாம் எமது, தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தொடர்பாடல் அவசியமாகின்றது. இத் தொடர்பாடலுக்கு எமது பேச்சு ஊடகமாக அமைகின்றது. ஆகவே நாம் பேசும் பேச்சானது அடுத்தவரைத்துன்பப்படுத்தாது பார்த்துக் கொள்ளல் அவசியம். நாம் ஒரு நாளைக்கு எவ்வளவு சொற்களைப் பேசுகின்றோம்? அவற்றில் பெரும்பாலான சொற்கள் தேவையில்லாத சொற்கள்.

திருக்குறளை எமக்கு அளித்த திருவள்ளுவர் கூறுகின்றார் நாம் பயனுடைய சொற்களைத் தான் கூறுதல் வேண்டும் என்று அவ்வாறு பயனில்லாத சொற்களைக் கூறவே வேண்டாம் என்கின்றார் இதனை அவர் தமது 200 ஆவது குறளிற் பின்வருமாறு கூறுகின்றார்.

'' சொல்லுக சொல்லிற் பயனுடைய ,சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் ''

இனி வள்ளுவர் ,கூறும் இன்சொல் எனும் அதிகாரத்தில்உள்ள குறள்களைப் ,பார்ப்போமேயானால் அவர் தமது 92 ஆவது திருக்குறளில்.

'' அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின் '' என்று கூறுகின்றார்.

நாம் எமது பாவங்களைப் போக்குவதற்காகவும், புண்ணியத்தைத்தேடிக் கொள்வதற்காகவும் பல்வேறுபட்ட தான தருமங்கள், அபிஷேகங்கள், திருவிழாக்கள் என்று செய்கின்றோம்

தன்னடக்கம் தலைசிறந்த குணம்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

இவற்றால் விளையும் நன்மையைக் காட்டிலும் நாம் முக மலர்ச்சியுடன் இரண்டு வார்த்தைகள் பேசக்கூடியவராக இருப் போமானால் அது மிகுந்த நன்மையை எமக்குத் தரக்கூடிய தாக இருக்கும் என்கின்றார்.

ஒருவன் பேசும் இனிய சொல்லானது பிறரைவருத்தாது இருக்குமானால் அது அவனுக்கு இப் பிறப்பில் மட்டுமல்லாது மறு பிறப்பிலும் நன்மையளிக்ககூடிய தாக இருக்கும் என்பதை

"சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்" என்று எடுத்துக் கூறுகின்றார்.

பிறர் எம்மீது வன் சொல் லைப் பிரயோகிக்கும் போது நாம் எவ்வாறுதுடித்துப்போகின் றோம் ஆனால் அதே நேரம் நாம் பிறர்மீது தாராளமாக வன் சொற்களைப்பிரயோகிக்கிறோம் இதுநியாயமான காரியமா? பிறர் கூறும் இன்சொல்லால் நாம் இன்பமடைவதை உணர்கின் றோம். ஆனால் நாம் பிறரிடத் தில் வன்சொல்லை வழங்குவது என்ன பயன் கருதி என்பதை,

"இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது" என்ற குறளில் விளக்கியுள்ளார்

எம்மிடம் இனிய பழங்கள் இருக்கும் போது நாம் அவற்றை உண்ணாது காய்களை உண்கின் றோமா? அது போலவே இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றைக் கூறாது கடுஞ்சொற் களைக் கூறுவதும் என்கின்றார். அதாவது பழங்கள் இருக்கும் போது காய்களை உண்பது மாதிரியான செயல் என்கின்றார்

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று"

நாம் கூறும் இனிய சொற்கள் கேட்பவனுக்கு மட்டுமன்றிச் சொல்லுவோருக்கும் இன்பம் தந்து நன்மையை விளைவிக்கும்.

"நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன் ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்"

மேற்கூறிய குறள்களில் இருந்தும் அவற்றின் விளக்கங்களில் இருந்தும் நாம் எவ்வாறான சொற்களைக் கூறல் வேண்டும் என்பது சிறிதளவேனும் விளங்கு வதாக இருக்கும்.

ஆகவே எம்மால் இயன்ற ளவு இன்சொற்களைப் பேசி வன் சொற்களைத் தவிர்த்து வாழப் பழகுவோமாக!

இவ்வாறு இன் சொற்களைப் பேசுவது அவ்வளவு கடினமான செயலாக ஒரு போதும் இராது. இதற்காக நாம் காசு பணம் செலவழிக்க வேண்டியதும் இல்லை. ஆயினும் நாம் இன் சொற்பேசுவதை அரிதாகவே கொள்கின்றோம். இதை உணர்ந்து இனியவை பேசி இன்புற்று இருப்போமாக!

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

## பஞ்சதந்திரம்

செல்வம் உண்டானால் தானும் அனுபவித்து, உத்தமர்கள், ஏழைகள் முதலானவர்களுக்கும் கொடுத்தல் வேண்டும். கொடுத்த லால் இன்பமும் புண்ணியமும் உண்டாகும். கொடுக்காத செல்வம் வீணாகும். பொருள் சம்பாதித்தல் யோக்கியமான தொழில். அதை யோக்கியமாக்கத் தருமந் தவறாது செய்தல் வேண்டும்.

தனக்குத் தகாத காரியத்தைச் செய்தால் யார்க்கும் துன்பம் உண்டாகும். புகழோடு வாழ்கின்றவர்கள் பாக்கியவான்கள். மூடன் நன்மை தீமை தெரியாமல் அற்பனாகிறான். தன் முயற்சியாலும் குணத்தாலும் ஒருவன் சமர்த்தனாகிறான். புத்திசாலிகள் அருமை யான காரியங்களைச் செய்வார்கள். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார். சமர்த்தனுக்கு எதுதான் பெரிது? பறவைக்கு எதுதான் தூரம்? வித்துவானுக்கு எதுதான் பரதேசம்? பிரியமாகப் பேசுகிற வனுக்கு எவர்தான் பகைவன்? காலம் அறிந்து பேசினால் அவ மானம் உண்டாகாது, கண்டபடி பேசினால் அவமானம் உண்டா கும். நெருப்பைத் தலைகீழாகப் பிடித்தாலும் அது மேல் நோக்கும். சற்குணனை அவமதித்தாலும் அவன் குணம் மேல் நோக்கி நிலவும். ரூபத்தைப் பார்க்காமல் குணத்தையே பார்க்க வேண்டும்.

வாள் முதலிய ஆயுதங்களும், வீணை முதலிய வாத்தியங்களும், பூமியும், பெண்களும், யோக்கியர்களும், சாஸ்திரங்களும் பரிபால னம் பண்ணுகிறவர்களாலே பிரகாசம் அடையும்.

துணிவுடன் துணையும் இருத்தல் வேண்டும்

உ

# சந்நிதி வெண்பா

[தொடர்...

உடுப்பிட்டி மணிப்புலவர்

புத்திதரு மீடில் புலமைதருஞ் சாந்திதருஞ்
சித்திதரு ஞானச் செழுமைதரும் - பத்திதரும்
சாதிமலர்க் காவோங்கு சந்நிதியி லாடிமகிழ்
சோதியயி லோன்றாட் டுணை.

பாடித் துதித்தறியாப் பாவியென்றோ சந்நிதியி
லாடித் தனிமகிழ்வி லார்முருகா - கூடிக்
கெடுக்குமல நோயைக் கெடுத்திவனுன் றாளை
யடுக்கவரு ளாத தறை.

மால்விளங்கு மென்றன் மனத்தகத்தி லுன்கமலக்
கால்விளங்கு மின்பிற் கலப்பதென்றோ - வேல்விளங்கு
திண்புயனே சந்நிதிவாழ் சேவகனே யொண்டமிழை
மண்டலத்தோர்க் கீந்தாய் மகிழ்ந்து.

என்றென்று முள்ளபொரு ளின்பெல்லா நல்குபொருள்
குன்றென்று மேவிக் குலவுபொரு - ளொன்றுபத்தித்
தொண்டருள மேவுபொரு போகைவள்ளி யைப்புனத்தாட்
கொண்டபொருள் சந்நிதியிற் கோ.

கரங்கொடுத்து நோயினரைக் காத்தருளி யின்ப
வரங்கொடுக்குஞ் சந்நிதியில் வாழ்வே - யுரங்கொடுத்து
நாயேனைக் காப்பதுமுன் நல்லகடன் றாய்தனது
சேயைமறந் துற்றிடுமோ தேர்.

செய்வதறி யாமற் றினமுழலு நாயேனுக்
குய்புநெறி காட்டி யுவந்தருளிச் - செய்யவயில்
வேற்கரனே நின்கமல மென்மலர்த்தா ளேத்தவருள்
பேர்ற்றுசெல்வச் சந்நிதியிற் போய்.

சந்நிதியை வெள்ளிதொறுஞ் சார்ந்துளது தாளிறைஞ்சும்
அந்நிதியை யெற்கில்லா தாக்கியதேன் எந்நிதியு
மீடாகா வொன்றே யெளியேன் றவங்குறைவு
பாடாள தாலோ பகர்.

[தொடரும்.....

பேச்சைவிடச் சிந்தனை ஆழமானது.

உ

# நுணாவிலிறை விளை வேலி தாழையம் பதி
# ஸ்ரீ துர்க்காதேவி கோவில் வரலாறு

இ. பொன்னுத்துரை

நெல்லும் முத்தும் பின்னி விளைவதால் விளைவேலி என்ற காரணப் பெயரைப் பெற்று விளங்கும் மிக அழகிய சிறுகிராமம். இது சாவகச்சேரித் தொகுதியின் வடபக்கமாக மட்டுவில் கிராமத்துக்குப் போகும் பாதையில் உள்ளது.

ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் மேற்கு நோக்கி அமைந்துள்ளது இது இந்தியாவில் வயலூர் என்னும் பிரசித்தி பெற்ற தலத்தின் அமைவை ஒத்தது எனயாத்திரிகர் பலர் அவ்வப் போதுகூறியுள்ளனர்.

வரலாற்றுப் பெருமையோடு கூடிய இக்கோவிலை 1835ஆம் ஆண்டுக்கு முன் ஸ்தாபித்துள்ளார்கள். ஆங்கில ஆட்சியில் தோம்பு என்னும் பதிவேடு வழக்கத்தில் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதிலிருந்து ஆதி சைவக் குலத்தவராய் விளங்கிய வேதக்குட்டிக் குருக்கள் வழிவந்தோர் தம்குல தெய்வத்தை இக்கோவிலில் வழிபட்டு நலம் பெற்றனர் என்பதும் புலனாகின்றது.

அம்பாளின் இருப்பிடத்தைச் சூழ நெய்தல் நிலப் பொருளான தாழை தழைத்தோங்கி நறுமணம் வீசும் பூக்களோடு நிற்பதால் தாழையம்பதி என்ற காரணப் பெயரும் வழக்கத்தில் உண்டு.

இவ்வயல் வெளியில் மிகப் பிரமாண்டமான மருதமரம் ஒன்று மேற்குஎல்லையை அழகு செய்கின்றது. இது நாலு பேர் கைகோத்து வளைக்கத் தக்க அடிமரம் கொண்டது. இதன் வயது கணிக்க முடியாதது என்பர் முன்னோர். அங்கு விநாயகர் ஆலயம் ஒன்று அம்பாளைப் பார்த்தபடி அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றது. அக்கிராம வாசிகள் அவரை மருதடிப் பிள்ளையார் எனப் பயபக்தியோடு அழைப்பர்.

சங்கு சக்கரங்களை யேந்தி இந்திர நீலம் போன்ற எழில் மேனியுடன் சிங்கவாகனத்திற் பவனிவரும் துர்க்கை மகிடாசுர மர்த்தனியாய் அடியார்களுக்கு அருள் பாலித்தவண்ணம் காட்சி தருகின்றாள்.

மனிதத்தன்மையைத் தருவது நல்லொழுக்கமே

தீர்த்தம்

வயல் எல்லையில் தாழை மரத்தடியில் தான் தோன்றியாய் உள்ள ஒரு சிறுகிணற்றிற் குளிப்போர் சகல அம்மன் நோய்களிலிருந்தும் விடுபட்டுத் திடகாத்திரராய் வாழ அருள் பெறுகின்றனர்.

வரலாறு நான் அறிந்தமட்டில் பழையசந்ததியார் குறிப்பிலிருந்து அம்பாள் ஆரம்பகாலத்தில் தாழைகள் மத்தியில் ஒருசிறு கொட்டிலில் அருள் பாலித்திருந்திருந்தாள்.

பங்குனித்திங்கள் நவராத்து பொங்கல் பூசைகள் செய்து வழிபட்டனர். பெண்கள் வீட்டில் நிறைய நெல் இருந்தாலும் மடிப்பிட்சை எடுத்து அப்பிட்சையைக் கொண்டு பொங்கலிட்டு வழிபட்டனர்.

பின் அடியார்கள், உரிமைக்காரராகிய நீலகண்டக்குருக்கள் ஆகியோரின் விடா முயற்சியால் ஒருமடாலயம் அமைந்தது பின்னர் தமையனார் மகா கணபதிக் குருக்கள் கையேற்றுப் படிப்படியாக முன்னேற்றினார்.


அதன் பின் 10 - 02 - 1919 முதல் பரமசாமிக்குருக்கள் தர்மகர்த்தாவானார். இவர்காலத்தில் அடியார் பலரின் ஆதரவுடன் கோவில் புனரமைக்கப்பட்டுத் தூபியுடன் கூடிய ஆலயமும் மண்டபங்களும் மணிக்கூண்டுக் கோபுரமும் நாற்புறமதிலும் பிறவும் இனிதே அமைவதாயின 04 - 07 - 58ம் ஆண்டு சரசாலை திரு. ச. பொன்னுச்சாமிப்பிள்ளையின் ஊக்கத்தால் அழகிய மூலமூர்த்தி பிரதிட்டை செய்யப்பெற்றார். அன்று முதல் பங்குனித் திங்கள் தோறும் பொங்கல், பௌர்ணமிப் பூசை, திருவிளக்குப் பூசை இலட்சார்ச்சனை, நவராத்திரிவிழா பங்குனி உத்தரம் எனப்பல தினவழிபாடுகள் நடக்கின்றன. தென்மராட்சியில் இன்று மிகப்பிரபல்யமான அம்பாள் ஆலயமாக இன்றைய தர்மகர்த்தாவின் ஊக்கத்துடன் இது விளங்குகின்றது. அகிலத்தைத் தாங்கும் தாயாக அம்மையை வழிபடும் மார்க்கம் சாக்த மார்க்கமாகும். இந்நெறி நின்று வழிபட்டு முத்தியடைந்தோர் எண்ணிலர் அவர்களுள் ஆதிசங்கரர், கம்பர், காளிதாசர், குமரகுருபரர், அபிராமிபட்டர், இராமகிருஷ்ணர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

"ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவிஅடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கருப்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே

எனவே தேவியை வணங்கி எங்கள் இடர் களைவோமாக!

# சந்நிதியான்

ந. அரியரத்தினம்



சந்நிதி முருகன், கதிர்காமக் கந்தன் ஆகிய இரு ஆலயங்கள் அந்த ஆலயங்களிலிருந்து அருள் மழை பொழிகின்ற தெய்வங்கள் இவை இரண்டிற்குமிடையே காணப்படுகின்ற பல்வேறு தொடர்புகள், ஒற்றுமைகள், மற்றும் சிறப்புக்கள் பற்றிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு கட்டுரைகளை ஞானச் சுடர் பிரசுரித்து வருகின்றது.

சந்நிதி முருகனுக்கும் கதிர்காமக்கந்தனுக்கும் மரபு வழியாக இடம் பெற்று வருகின்ற முக்கிய இரண்டு நிகழ்வுகளாகக் கதிர்காமத்திற்குச் சந்நிதியிலிருந்து வேல் செல்லுகின்ற நிகழ்வையும், கதிர்காமத்திலிருந்து சந்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

நிதி முருகன் திரும்பி வருகின்ற நிகழ்வினையும் குறிப்பிடலாம். இந்த இரண்டு நிகழ்வுகளும் சந்நிதி ஆலயத்தில் இன்றும் உணர்வுபூர்வமாக இடம்பெற்று வருகின்றன. சந்நிதியானை வழி அனுப்பும் பொழுது உழுத்தம் பிட்டுப்படைக்கப்படுவதும் அவர் திரும்பி வரும் பொழுது பயற்றந் துவையலும் இளநீரும் படைக் கப்படுவதும் அடியார்கள் அறிந்த விடயங்களாகும்.

இவ்விதமான இறுக்கமான மரபு வழித்தொடர்புகளும், பூசை முறைகளும், மற்றும் சடங்குகளும் இடம் பெற்றுக் கொண்டிருப்பதனால், சந்நிதி யான் அடியார்கள் கதிர்காமத் திற்கும் சென்று வழிபட நினைப் பது இயல்பானதே. அதிலும் தற்பொழுது ஏற்பட்டுள்ள சமா தானச் சூழ்நிலையில் இவ்வித மான தலயாத்திரை அதிக அள வில் இடம் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் சந்நிதி ஆல யத்தில் தொண்டு செய்கின்ற தொண்டர்கள், ஆலயப் பூசகர் கள் ஆகியோரும் கதிர்காமத்தில் உற்சவம் நடைபெறுகின்ற இக்கால கட்டத்தில் அங்கு தல யாத்திரை சென்று கதிர்காமக் கந்தனை வழிபட்டதுமட்டுமன் றித் தமக்கு ஏற்பட்ட அற்புத அனுபவங்களையும் தமக் கிடையே பகிர்ந்து கொள்வதைக் காண முடிகின்றது.

இத்தகைய சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஆச்சிரமத் தின் சுவாமிகளும் கதிர்காமத் திற்குத் தலயாத்திரை மேற் கொள்ள விரும்பினாலும் ஒரே நேரத்தில் ஆச்சிரமம், பேரவை தொடர்பாக ஒன்றுக்கு மேற் பட்ட வேலைகளில் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் முழு நேரச் செயற்பாட்டாள ராக இருக்கும் அவர் கதிர் காமம் செல்வதற்கு ஆயத்தம் செய்வதும் அதற்கான மாற்று ஒழுங்குகளை ஆச்சிரமத்திற் செய்வதும் கடினமானதென்பது அவருக்குத் தெரியாததல்ல. ஆகவே, கதிர்காமம் செல்வ தென்பதை அதிகம் அலட்டிக் கொள்ளாது அதனை ஆறப் போட்டு விட்டுத்தனது அன்றா டக் கருமங்களில் ஈடுபடலா னார்.

ஆனால், திடீரென அவரு டைய மனத்தில் கதிர்காமம் சென்று வர வேண்டுமென்ற யோசனை திடமாக ஏற்பட்டது. எனவே, எப்படியும் கதிர்காமம் சென்று உற்சவ காலத்தில் அவ னைத் தரிசித்து வருவதற்கு முடிவு செய்து ஆச்சிரமத்தில் அன்னதானச் செயற்பாட்டிற் குத் தொண்டு செய்கின்ற உரும்பராயைச் சேர்ந்த புஷ்பம் என்ற அன்பருடன் கதிர்காமத் திற்குத் தலயாத்திரை மேற்

சிறந்த தர்மம் சுயநலமற்ற சேவை.

கொண்டு மூன்றாம் நாளே ஆச்சிரமத்திற்குத் திரும்பி விட்டார்கள்.

ஆனால் ஒரு இரவு, பகல் முழுமையாகக் கதிர்காமத்தில் தங்கி, யானையில் கதிர்காமக் கந்தன் வீதி உலா வருகின்ற காட்சி, காவடியாட்டம், கரகாட்டம் என்பவற்றை எல்லாம் கண் குளிரக்கண்டு பல நாட்கள் கதிர்காமத்தில் தங்கியிருந்தது போன்ற பூரண திருப்தியுடனேயே அவர்கள் திரும்பியுள்ளார்கள். அத்துடன் பிரயாணத்தின் பொழுது இவர்களுக்காகவே வாகனங்கள் காத்திருந்தது போன்ற வசதிகள் கிடைத்ததுடன் எந்தவிதமான களைப்புமின்றித் தலயாத்திரையை முடித்துக் கொண்டது ஒரு அதிசயமான நிகழ்வே.

இத்தகைய நிகழ்வுகள் எல்லாவற்றிலும் கதிர்காமக்கந்தனுக்குக் கொண்டு சென்ற நிவேதனப் பொருட்கள் தொடர்பான சம்பவங்கள் ஆச்சிரமத்தின் சுவாமிகள், அவருடைய நண்பர் என்பவர்களுடன் மட்டுமன்றிக் கதிர்காமத்துப் பூசகர் மற்றும் நிவேதனப் பொருட்களை வழங்கிய வைத்திய அதிகாரி சி. கதிரவேற்பிள்ளை என்போருக்கும் அற்புத அனுபவங்களாகவே அமைந்துள்ளன.

மாவட்ட வைத்திய அதிகாரி சி. கதிரவேற்பிள்ளை அவர்களுக்குத் தமது வளவிற் காய்த்த பலாப்பழத்தைக் - கலியுகக்கந்தனுக்கு நிவேதனப் பொருளாக வழங்க வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டது. இதுபற்றியோசித்த வைத்திய அதிகாரி அவர்கள் அதனை ஆச்சிரமத்தில் வழங்கி அங்கேயே படைப்பதன் மூலம் அது முருகப் பெருமானுக்குப் படைக்கப்பட்டதற்கு ஈடாகும் தானே என நினைத்து அதனை ஆச்சிரமத்திற்கு எடுத்துச் சென்று அங்கேயே அதனைப் படைக்குமாறு ஆச்சிரமத்தின் சுவாமிகளிடம்கையளித்தார்கள்.

ஆச்சிரமத்தின் சுவாமிகள் கதிர்காமத்திற்குச்சென்று வருவதற்கான திடமான முடிபினை எடுத்த சமயத்தில் கதிர்காமத் தல யாத்திரையின் பொழுது கதிர்காமக்கந்தனுக்கு நிவேதனப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு வசதியாக அவருடன் கூடச்செல்வதற்காகஇருந்த புஷ்பத்திடம் பலாப்பழம் ஒன்றுக்கு ஒழுங்கு செய்திருந்தார்கள் அதற்கிணங்கத் திரு. புஷ்பம் அவர்களும் ஒரு பலாப்பழத்தை யாத்திரைக்குப்புறப்படும் நேரம் கொண்டு வந்து சேர்த்தார்கள். அதனை நன்கு கவனித்த சுவாமிகள் திரு. புஷ்பத்தைப் பார்த்து ''**இந்தக் காய்ப்பலாப் பழத்தையா யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமக் கந்தனுக்குக் கொண்டு செல்லப் போகின்றாய்**'' என அவரைப் பார்த்துக்கூறிவிட்டுப்

புஷ்பம் கொண்டு வந்தகாய்ப் பலாப்பழத்தை அங்கேயே வைக்குமாறு கூறிவிட்டு ஏற்கெனவே கதிரவேற்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருந்த அந்தப் பலாப்பழத்தைப் பெட்டியில் வைத்துப்பக்குவமாகக் கட்டுமாறு கூறி ஏற்கெனவே தயார் நிலையில் இருந்த மாம்பழம், தினைமா, தேன், போன்ற நிவேதனப் பொருட்களுடன் அந்தப்பலாப் பழத்தையும் கதிர்காமம் கொண்டு சென்றனர்.

இவ்வாறு எடுத்துச் சென்ற பலாப்பழத்தையும் ஏனைய நிவேதனப் பொருட்களையும் கதிர்காமத்தில் ஆலயப் பூசகர்களிடம் வழங்கி இதை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவந்திருக்கிறோம் எனக்கூறியபொழுது அவர்கள் "இப்படி ஒரு பலாப் பழத்தைத்தானே நாங்கள் இங்கே எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இங்கே பஞ்சாமிர்தம் செய்வதற்கு நல்ல பழங்கள் தேவை என நாம் யோசித்துக் கொண்டிருந்த பொழுது அவற்றைக் கொண்டு வந்துள்ளீர்கள்" எனக்கூறி அக மகிழ்ந்து மிகவும் வாஞ்சையுடன் அதனைப் பெற்றுக்கொண்டனர் அத்துடன் பொருத்தமான சந்தர்ப்பத்தில், பொருத்தமான நிவேதனப் பொருட்களைத் தாமாகவே கொண்டுவந்து கையளித்த சுவாமிகளையும் அவரது நண்பரையும் நன்கு உபசரித்து வழியனுப்பினர்.

இதே வேளை மாவட்ட வைத்திய அதிகாரி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் கதிர்காமத்திற்குத் தன்னால் செல்ல முடியவில்லையே என மனம் வருந்திய வேளை கந்தக்கடவுளாருக்கு நிவேதனமாகப் படைக்கப்பட வேண்டிய தனது பலாப்பழம் கதிர்காமக் கந்தனுக்குப் படைக்கப்பட்டதன் மூலம் தான் கதிர்காமம் செல்லவில்லையே என்ற தனது மனக்குறையைக் கந்தக் கடவுள் நீக்கியுள்ளது பற்றியும் கதிர்காமத்தில் வீற்றிருக்கும் கடவுளாருக்குத் தன்னுடைய பலாப்பழம் நிவேதனமாக்கப் பட்டதனால் தனக்கு மிகப் பெரிய பேறு கிடைத்திருப்பது பற்றியும் விபரமாக எமக்கு எழுதி, கரவெட்டிப் பலாப்பழம் கதிர்காமக் கந்தனைத் தரிசித்த கதை என அதற்குத் தலையங்கமும் இட்டு அனுப்பியுள்ளார்கள்.

கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கிணங்கக் கலியுகக் கந்தனாகிய ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனும், கதிர்காமக்கந்தனும் இவ்வாறு ஆயிரம் ஆயிரம் அடியார்களுக்கு அருளை அள்ளி வழங்கி வருவதனால் தான் இந்த இரண்டு ஆலயங்களுக்கும் அடியார்கள் கூட்டம் தினமும் அலைமோதிக் கொண்டிருப்பது யதார்த்த நிகழ்வுகளாக உள்ளன.

ஓம் முருகா!

# சிவபூமி புற்றுநோயாளர் கருணை நிதியம்

புற்று நோயினால் துன்பப்படும் உச்ச வறுமைக் குட்பட்ட நோயாளர்களுக்கு உதவும் பொருட்டு இவ்அற நிதியம் செயற்பட்டு வருகிறது. யாழ் போதனாவைத்தியசாலை கண்வைத்திய நிபுணர் ச. குகதாசன், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், போதனா வைத்திய சாலைப் பிரதம கணக்காளர் இணைந்து இவ் அறக்கட்டளையைச் செயற்படுத்தி வருகின்றனர் இந் நிதியத்திற்கு இம் மாதம் நிதி உதவியவர்கள்

| | |
|---|---|
| திரு. பொ. ரஞ்சன் ( ஊரெழு ) - U. K. | 100000 00 |
| அமரர் எஸ். விவேகானந்தன் ஞாபகார்த்தமாக | 5000 00 |
| திரு. எஸ். ரி. என். பஞ்சாட்சரம் | 38000 — |
| திருமதி K. நாகேஸ்வரி ஜேர்மனி | 30000 ... |
| திருமதி பவளம் ( மீசாலை ) மகாலிங்கம் ( இணுவில் ) | 1000 ... |

**ஆறு. திருமுருகன் அவர்களுக்குத் தொடர் சொற்பொழிவு காரணமாக வழங்கப்பட்ட கருணை நிதியம்**

| | |
|---|---|
| திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயில் இளைஞர்கள் | 12000 ... |
| கோண்டாவில் ஆதிமட அரசடி விநாயகர் ஆலயம் | 12000 ... |
| சுதுமலை எச்சாட்டி ஞானவைரவர் ஆலயம் | 7000 — |
| பருத்தித்துறை அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயம் | 10000 — |


**இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் வழங்கிய நிதியுதவி 12 - 07 - 2002 முதல் 31 - 07 - 2002 வரை**

75 புற்று நோயாளருக்குத் தலா 2000 ரூபா வீதம் யாழ் போதனா வைத்திய சாலையில் வழங்கப்பட்டது. சைவ சமய மக்கள் கருணைப் பணிகளில் அக்கறை கொள்ள வேண்டும் எனப்பலரும் வெறும் பேச்சளவில் உச்சரித்து விட்டு இருந்து விடுகின்றனர் செயலளவில் எதைச் சாதிக்கிறீர்கள் என்ற வினாவுக்கு விடையளிபது போல் அமைந்துள்ள பணி புற்று நோயாளர் கருணை நிதியம் கடந்த நான்கு ஆண்டுகளாக இலண்டன் கனடா அவுஸ்திரேலியா சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஆன்மீகப் பணிக்காகச் சென்ற செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் சில வேண்டுதல்களால் இது வரை சுமார் 6 இலட்சம் ரூபா வரை யாழ் மாவட்டத்தில்வாழும் புற்று நோயாளர்க்கான பேருதவி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

○ பக்தர்களின் மகிழ்ச்சி பகவானுக்கு ஆகாரம் போன்றது. ○

# இறைவனை வணங்க வேண்டுமா? வணங்க வேண்டியதில்லையா?

சி. சு. கணேசு



மும்மலங்களினாற் பீடிக்கப் பட்ட ஆன்மா அவற்றிலிருந்து விடுபடும் வரை மீண்டும் மீண் டும் வேறு வேறு உடல்களிற் பிறந்து கொண்டே இருக்கின்றது. மனிதனாகப் பிறக்கும் போது, அம் மலங்களிலிருந்து விடுபடக் கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. அதனை அநேக மாந் தர் பயன்படுத்திக் கொள்ளாமல் லௌகீகங்களில் மயங்கித் திரிகின் றனர். இருப்பினும் அம்மானு டர்களிற் சிறுபகுதியினராவது பேரின்பமாகிய இறைவனை அடைதற்கான வழிகளை நாடா மல் இல்லை. இதற்காக எச்சம யத்தவராயினும், முக்கியமாக இந்துமதத்தவர், எம்முன்னோர் களின் வழிகாட்டலில் அமைதி யான இடங்களிலே ஆலயங்கள் அமைத்து, அவற்றில் மரபுவழி முறைகளில் இறை வடிவங்களை அமைத்துத் தாமும் வணங்கி, எம்மையும் வணங்க வைத்துள்ள னர். பிறந்தவுடனே உயிர்கள் மும்மலங்களைக் கொண்டிரா நிலையைக் கொண்டுள்ளன. காலம் செல்லச் செல்ல வெளியக, உள்ளக ஐம்புல உணர்வுகளாலே பந்தங்கட்குட் பட்டுத் துன்பங்களை அனுபவிக்க முற்படத் தொடங்குகின்றன. இந்த நிலையிலேயே இறைவ னைப் பற்றிப்பிடிக்க வேண்டிய நிலை அவசியமாகின்றது. இதற் குப் பொருத்தமான இடமாவன ஆலயங்களும் (ஆலயம் -> ஆ+ லயம் -> ஆன்மா லயிக்கும் இடம்) அங்கே அமைக்கப்பட்ட இறை வடிவங்களுமாகும். இந்த வகையில் முன்னோர் தந்த கருத் தமைவுகளுக்கேற்றபடி மனத்தை ஒரு வழிப்படுத்தி அங்கே இறைவடிவத்தை உற்று

நோக்கும் போது, தியானித்து வணங்கும் போது அமைதியினையும், பேரின்ப சுகத்தையும் அனுபவிக்க முடிகின்றது. இது பல நாட்கள் அல்லது பல காலங்கள் தொடரும் போது - எம்முன் இருக்கும் அல்லது எம்முள் முளைத்தெழும் தேவையற்ற ஆசைகளும் அவற்றை உணர் தேவைகளும் அகன்று செல்லும் நிலை அவதானிக்கப்படும். அப்போது இறைவன் எம்முள் உறைந்து வருகின்ற உணர்வு நிலை தென்படும். இதைத்திருமூலர் அழகாக " நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில் " என்றார்.

அதே போன்றுதான் பந்தங்களினாலே அதாவது மும்மலங்களினாலே சுற்றித்திரையிடப்பட்ட ஆன்மா, இறைவனைத் தியானிக்கும் போது அவைகள் திரை விலகுவது போல் அகன்று அடங்கி விடுகின்றன. இதனையும் திருமூலர்,

" மரத்தை மறைத்தது மா மதயானை
மரத்துள் மறைந்தது மா மதயானை " என்றார்.

எனவே இறைவன் நிலையை அடையும் வரை நாம் அவரைத் தியானிக்க வேண்டும், வணங்க வேண்டும். ஒரு நிலையில் இறை சக்தி எம்முணர்வுடன் முற்றாகச் சேர்ந்த நிலையில் நாமும் இறைவனாகின்றோம். இந்த நிலையில் அவனை நாம் வணங்க வேண்டிய அவசியமற்றுப் போகின்றது. அங்கே இறைவனும் ஆன்மாவும் ஒன்றாகவிடுவதாம்.

எனவே, இறைவனை எவ்வாறு வணங்க வேண்டுமெனப் பெரிய புராணத்திலே குறிப்பிடப்படுகின்றது.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக,
குணமொரு மூன்றும் திருந்து சாத்விகமேயாக
இந்துவாழ் சடையன் ஆடும் ஆனந்த எல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

⁂ சேர்ப்பது அழிவிலும், முன்னேறுவது வீழ்ச்சியிலும், சேர்க்கை பிரிவிலும், வாழ்க்கை மரணத்திலும் முடிவடையும்.

⁂ எது உண்மை, எது நிலையற்றது என்ற ஞான ஆராய்ச்சி தேவை; வீண் விவாதம் கூடாது.

இரக்கம் காட்டு, ஆனால் ஏமாந்து போகாதே.

உ

# சமய வாழ்வில் நாம்

வே. கிருஷ்ணன்

**ஆனி மாத இதழில் சஞ்சயன் தூது என்ற கட்டுரையின் கடைசிப் பந்தியை இப்படி முடிக்கின்றார் ஆசிரியர்.**

''பாரதத்தில் வரும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் நல்ல அறிவுறுத்தல்களையே எமக்குத் தருகிறது. ஆனால், நாம் அதனைச் சுவாரசியமான கதையாகப் படிப்பதும் கேட்பதுமாகச் செயற்படுகின்றோமோ அன்றிப் படிப்பவற்றைச் செயற்படுத்துவதுமில்லை, கருத்திற் கொள்வதுமில்லை' ஆம்! இது உண்மை

மந்திகை வைத்தியசாலைக்குப்போன பொழுதுகிறிஸ்தவப் பெரியார் ஒருவர் இன்னொருவருக்குச் சொல்லிக் கொண்டு இருந்தார் ''திருமறைகள் பரப்பப்படுகின்றன, போதிக்கப்படுகின்றன ஆனால் மக்கள் திருந்துவதாகக் காணவில்லை'' என்று.

சத்திய சாயி பாபாவே கூறுகின்றார் மக்கள் ஆயிரக்கணக்கில் இங்கு கூடுகின்றார்கள், தரிசிக்கின்றார்கள் ஆனால், என் போதனைகளைப் பின்பற்றுகின்றார்கள் இல்லை. விழாக்களில் பேசி என்ன பிரயோசனம் பேசுவதை நிறுத்தப் போகின்றேன் என்று கடந்த வருடம் கூறினார் என்று அறிகிறோம். பின் பக்தர்களின் வேண்டுகோள்களைக்கேட்டுவிட்டுப் பேசினார்.

எங்கள் பாடசாலைகளிற் சமயம் கட்டாய பாடம். எத்தனையோ மாணவர்கள் 'D' எடுக்கின்றனர். அதனால் சமய அறிவு, ஒழுக்கம் வளர்ந்ததா? கோயில்களுக்கு மக்கள் கூட்டம் அதிகம். ஆனால் என்ன பிரயோசனம் இளைஞர்கள் ஒரு விதமான ஆசையில் நிற்கிறார்கள். பெரியவர்கள் இன்னொரு வித ஆசைகளை நிறைவேற்ற முயல்கின்றார்கள். பணம், பட்டம், பதவிகளுக்காக அலைகின்றனர்.

சமயம் என்பது ஒரு வாழ்க்கை நெறி மனிதன் மிருகம் போல் வாழாமல் ஒரு ஒழுங்கு முறைக்கு இசைந்து நடக்கத் தூண்டுவது தான் சமயம்.

வையகத்து வாழ்வாங்குவாழ்பவன் வானுறையும் தெய்வமாகக்

கருதப்படுவான்'' என்பது திருக்குறள் சமயத்தில் எப்படி வாழ வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அகத்திலும் புறத்திலும் தூய்மையைப் பேண என்ன செய்ய வேண்டும் என்று சமயம் சொல்கிறது.

நேரு ஓரிடத்திற் குறிப்பிடுகின்றார். மனிதர் அகத்தூய்மை பற்றிக் கவலைப்படாது புறக்கிரியைகளிற் கவனம் செலுத்தித் தம்மைத் தூய்மையான சமயவாதியாகக் காட்ட முயல்கின்றனர். சில புறக்கிரியைகளைப் பின்பற்றுகின்றனர். நேருசொல்லும் ஒரு உதாரணம் குளித்த பின்தான் உணவு அருந்துதல், நாங்கள் எத்தனையோ உதாரணங்களைக்காட்டலாம். வாழையிலையிலேசாப்பிடுதல்தோய்த்து உலர்ந்த ஆடை அணிதல் முதலியன.

விரதம், உபவாசம் என்று இருக்கின்றனர். இவை எல்லாம் அவசியம்தான் இவை எங்களுக்கு நல்ல வழிகளைக் காட்டுகின்றன ஆனால் இவை தனித்து எங்களுக்கு நற்கதியைத்தரமாட்டா ஏன்எனில் இவை வழிகளே அன்றி முடிபுகள் அல்ல.

எங்களுக்குத் தேவையானது மனமாற்றம். காமம், குரோதம் லோபம் முதலியன நீங்கி வாழ்க்கையில் நாம் உன்னத இலட்சியங்களைப் பின்பற்ற வேண்டும் தன்னலங்கருதாமை, எல்லோரிடமும் அன்பு, சேவை, மனப்பான்மை ,பணிவு என்பனவளர வேண்டும்.

வெள்ளத்தனையது மலர் நீட்டம், மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு என்றார் திருவள்ளுவர். எனவே, உயர்வை நாடுவதற்காக நாம் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளின் திருப்பாவையிலே சில வரிகளைப் பார்ப்போம்.

வையகத்து வாழ்வீர்கள்
நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரியைகள் கேளீரோ - பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம்
நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டுநாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

தர்மம் செய், ஆனால் ஆண்டியாகிவிடாதே.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

இதன்படி விரதநாட்களில் அலங்காரம் செய்தலைத் தவிர்க்க வேண்டும். உணவிலே சுவைபார்க்கக் கூடாது. பொய், புறங்கூறுதல் முதலியன விடுதல். செய்யத்தகாத செயல்களை விடுதல். ஐயமும் பிச்சையும் இடுதல் இதில் ஐயம் எம்மிடம் வந்து கேளாது. தம்மிடத்தில் இருக்கும் பெரியோர், வயோதிபர் களுக்கு காமாகத் தேடிக் கொண்டுபோய் உதவி செய்தல் பிச்சை, தம்மை நாடி வந்தவர் களுக்குக் கொடுத்தல் இப்படி நடந்து,

இறைவனிடம்: தூயோமாய் வந்து நாம்
தூமலர் தூவித் தொழுது
வாயினாற்பாடி மனத்தினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான்
நின்றனவும் தீயினில்
தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

என்கிறார் ஆண்டாள் எனவே நாம் செம்மையான முறையில் விரதம் இருந்து சந்நிதியானைத் தொழுதால், தெரிந்தோ, தெரியாமலோ அறிந்தோ, அறியாமலோ நாம் செய்யும் தவறுகள் மன்னிக்கப்பட்டு நற்கதி அடைவோம் என்பது திண்ணம். பெயரளவிலே பக்தர்களாக இராது உண்மையான பக்தர்களாக, ஆன்மீக வாதிகளாக இருப்போமாக!

---

நமது வாழ்வின் ஒவ்வோர் அசைவையும். ஒவ்வொரு பேச்சையும் ஒவ்வொரு வித உணர்வையும் ஆண்டவன் முன்னமே தீர்மானித்து விடுகின்றான். அவனன்றி ஓரணுவும் அசைவதில்லை. நாம் பேசும் பேச்சு, விதியின் பேச்சு, நாம் நடக்கும் நடை நமக்கு விதி வகுத்துத்தந்தவை இதைப் பின்னால் தான் நாம் உணருகிறோம்.

பேராசை, பாவங்களைச் செய்யத் தூண்டும், சாப்பாட்டு ஆசை வியாதிகளை வளர்க்கும், அதிகபாசபந்தம் துயரத்தை விளைவிக்கும், ஆகையால் பேராசை, நாச்சுவை, உறவு, ஆகிய மூன்றையும் விட்டால்தான், நிம்மதியும் மகிழ்ச்சியும் பெறமுடியும்.

# மோதகமும் கொழுக்கட்டையும்

S. R. சரவணபவன்

மோதகமும் கொழுக்கட்டையும் தமிழ் மக்களின் மதிப்பு மிக்க ஒரு நைவேத்தியமாகவும், சிற்றுண்டியாகவும் மிக நீண்ட காலமாக இருந்து வந்துள்ளன. விநாயகருக்கு மோதகம் படைப்பதிலிருந்தும், விநாயகர் தமது கையில் மோதகம் வைத்திருப்பதைக் கொண்டும் இந்த மோதகத்தின் தொன்மையை நாம் அறியலாம். அத்துடன் மோதகம் ஓர் நிறையுணவு என்பது தற்கால ஆராய்ச்சியாளர்களின் முடிபு.

விநாயகர் பூரணமானவர் என்பதைக் குறிக்குமுகமாக மோதகம் படைக்கப்பட்டு வருகின்றது.

கொழுக்கட்டையிலும் மோதகத்தில் உள்ள அதே பொருட்கள்தான் உள்ளன. ஆனால் உருவம்தான் வித்தியாசமாக இருக்கிறது இந்த உருவ வேறுபாட்டிற்குக் காரணம் என்ன? என்பதை நாம் அறிந்துகொண்டால் எமது முன்னோர்கள் எவ்வளவு தூரம் இந்தப் பிரபஞ்சத்தை ஆராய்ந்தனர் என்பது புலனாகும். உலகம் உருண்டையா? தட்டையா? என்ற விவாதம், மேற்கு நாடுகளில் 14-ம் 15-ம் நூற்றாண்டில் நடைபெற்றது. ஆனால், கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாகவே எமது முன்னோர்கள் உலகம் உருண்டை என்பதையும் சூரியனைப் பூமி சுற்றி வருகிறது என்ற உண்மையையும் கண்டறிந்து அதனையே ஒரு உருவமாக்கி இறைவனுக்கு நைவேத்தியமாக்கினார்கள்.

ஒரு வருடத்தை உத்தராயணம், தெட்சணாயனம் என இரண்டு பிரிவாக வகுத்துள்ளனர். தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் முடிய உள்ள 6 மாத காலத்தையும் உத்தராயணம் என்றும், ஆடி மாதம் முதலாக மார்கழி மாதம் வரையுள்ள 6 மாத காலத்தையும், தெட்சணாயனம் என்றும் வகுத்துள்ளனர். உத்தராயண காலம் தேவர்களுக்குப் பகற் காலமெனவும், தெட்சணாயனம் தேவர்களுக்கு, இராக்காலம் எனவும் கூறப்பட்டுள்ளது. உத்தராயண

பேச்சைவிட மௌனமே சிறந்தது.

காலத்தில் எமது இந்து ஆலயங்களில் மகோற்சவங்கள் சிறப்பாக நடைபெறுவதை நாம் காணலாம். அதேபோல் தெட்சணாயன காலத்தில் விழாக்கள் இரவில் அசுரர்களால் ஏற்படும் பயத்தைப் போக்கக்கூடியனவாக அமைகின்றன. நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை விளக்கீடு போன்ற விழாக்கள் இதற்கு உதாரணமாகும். மார்கழி மாதம் தேவர்களுக்கு அதிகாலைப் பொழுதாகவுமுள்ளது. இதனால்தான் அதிகாலையில் திருவெம்பாவை, திருப்பாவை பாடி இறைவனைத்துதிக்கிறோம். மார்கழி மாதத்தை இந்துக்கள் மட்டுமல்ல உலகிலுள்ள மதங்கள் எல்லாம் புனிதமாகக் கொண்டாடுகின்றன. மார்கழியில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ்விழாவையும், முஸ்லிம்கள் நோன்புப் பெருநாளையும் கொண்டாடுகின்றனர். ஆகவேதான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் மாதங்களில் நான் மார்கழி எனக்கூறினார்.

மார்கழி மாதத்தில் பூமி, சூரியனை வலம் வந்து தனது பயணத்தைப் பூர்த்தியாக்கித் தைப்பொங்கல் அன்று தனது அடுத்த சுற்றுப்பயணத்தை ஆரம்பிக்கிறது. இதனைக் குறிக்குமுகமாக இந்துக்கள் முழு உருண்டை வடிவமுள்ள மோதகத்தைச் சூரியனுக்குப் படைத்துத் தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர். தைப்பொங்கல் அன்று யாரும் கொழுக்கட்டை படைப்பதில்லை.

கொழுக்கட்டை ஆடிப்பிறப்பன்றுதான் நிவேதிக்கப்படுகிறது. கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை அவர்களும் தமது ''ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை'' என்ற பாடலில் ''கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே'' என்று ஞாபகமூட்டுகிறார். தைமாதத்தில் சூரியனைச் சுற்றும் பயணத்தை ஆரம்பித்த பூமி ஆனி மாதமுடிவில் தனது அரைவாசிப் பயணத்தை முடிக்கிறது. ஆடி மாதப்பிறப்பன்று அடுத்த அரைவாசிப் பயணத்தை ஆரம்பிக்கிறது. ஆகவே, அரைவட்டவடிவமான கொழுக்கட்டையை ஆடிப்பிறப்பு அன்று இறைவனுக்கு நைவேத்தியமாக்கி நண்பர்களுடன் உண்டு மகிழ்கிறோம்.

ஆகவே தான் முழுவட்டம் பூர்த்தியாகும் தைப்பொங்கல் அன்று முழு உருண்டைவடிவமான மோதகமும், ஆடிப்பிறப்பு அன்று அரைவட்டம் பூர்த்தியானதைக் குறிக்கும் அரைவட்ட வடிவமுடைய கொழுக்கட்டையும் நிவேதிக்கிறோம். எனவே ஆடிப்பிறப்பிலன்று கொழுக்கட்டை படைத்து உண்டு மகிழ்வோமாக.

புலன்களை அடக்கிஆள்வதே நன்று.

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

06 - 09 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு. கு. அருணகிரிநாதன்

விடயம் :- " இன்னிசை "

வழங்குபவர் :- விமலேஸ்வரி பொன்னுத்துரை (ஆவரங்கால்)

வயலின் : பிரம்மஸ்ரீ வே. தியாகராஜசர்மா [ ஆவரங்கால் ]

மிருதங்கம் : திரு. ச. ஹரிகரன்

முகர்சிங் : திரு. ராஜா [ மல்லாகம் ]

---

13 - 09 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- லயன் K. செல்வரத்தினம் J. P.

விடயம் :- " வேலுண்டு வினைதீர்க்க "

வழங்குபவர் :- சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராசக்குருக்கள் [ நெல்லண்டை, தும்பளை ]

---

20 - 09 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு. இ. சொக்கலிங்கம் [ இளைப்பாறிய ஆசிரியர் ]

விடயம் :- " பகவத்கீதை " ( தொடர் )

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் [ விரிவுரையாளர் யாழ் / கல்லூரி வட்டுக்கோட்டை ]

---

27 - 09 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# புரட்டாதி - 2002

வெளியீட்டுரை :- பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா [நீர்வை மணி]

மதிப்புரை :- Dr. S. சிவலிங்கராசா [ யாழ் / பல்கலைக்கழகம் ]

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2002 ஜனவரி ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 2003 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க்குழு;
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவை
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.